# அரசு ஊழியர்

ஏப்ரல் 2021

மலர் : 42 இதழ் : 4

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக

அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : ஆ.செல்வம்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, மொ.ஞானத்தம்பி, மு.பாஸ்கரன், இரா.ந.நம்பிராஜன், தெ.வாசுகி

முகவரி : பழைய எண். 48

புதிய எண் 46, தேரடித் தெரு

திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

e-mail : arasuoozhiyar@gmail.com

அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ், 19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஆண்டுச் சந்தா : ரூ. 100 தனி இதழ் ரூ. 10


## சூடா ஒரு கோப்பை சூப்

### வீசிடும் வாளாகட்டும் விரல்!

வாக்குகளை அள்ள
வலைகள் காத்திருக்கின்றன;

விரலைத் தீட்டிடுங்கள்
வீசிடும் வாளாய்!

அறுபடட்டும் வலைகள்;
விடுபடட்டும் மக்களாட்சி!

நகக் கண்ணில் மைதீட்டுங்கள்
நலம் பெறட்டும் நம்நாடு!

கறை படிந்த கைகளுக்கு
விரல் கொண்டு விலங்கிடுங்கள்!

வெறும் முகவரிக்காக வாக்களிக்காமல்
முகங்களைப் பார்த்து வாக்களியுங்கள்!

- கோ. மகிவரன்



தலைவர் மடல்

## தேர்தல் காலத்து 'இலவச' பொய்கள்

எந்தக் குட்டிக் கரணம் போட்டாவது மீண்டும் தமிழக சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற முனைப்பில் அதிமுக கட்சியும், ஒன்றிரண்டு இடங்களையாவது வென்று இந்தமுறை பேரவைக்குள் நுழைந்துவிட வேண்டும் என்ற வெறியுடன் பாரதிய ஜனதா கட்சியும் வாய்க்கு வந்தபடி இலவசங்கள் என்ற பெயரில் பொய்களை அவிழ்த்து விட்டு வருகின்றன. சென்ற ஆண்டுகளில் அடுத்தடுத்து இயற்கை சீற்றத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டு புயல், வெள்ளம், மழை போன்றவற்றால் தத்தளித்த தமிழகத்திற்கு பிச்சை போடுவதைப் போல, கேட்ட தொகைக்கும் கொடுத்த தொகைக்கும் சம்பந்தமில்லாமல் சில்லறைத் தொகையை மட்டும் கொடுத்தது மக்கள் யாரும் மறக்க முடியாத விஷயமே. ஆனால் இப்போது பாஜக மத்திய மந்திரிகள் பேசுவதைத் பாருங்கள் தமிழகத்திற்கும் புதுச்சேரிக்கும் ஏராளமான நிதியுதவியை வழங்கியதாகவும் ஏராளமான திட்டங்களை நிறைவேற்றி வருவதாகவும் தேர்தல் பிரசாரத்தில் பொய் மூட்டைகளை அவிழ்த்து விட ஆரம்பித்துவிட்டனர்.

2021 மார்ச் மாதத்தில் விழுப்புரத்தில் தேர்தல் பிரச்சாரம் செய்த மத்திய அமைச்சர் அமித்ஷா, அதிமுக அரசு நிர்வாகத்திலும் நீர் மேலாணமையிலும் சிறப்பாகச செயல்படுவதாக சான்றளித்தார். எடப்பாடி அரசு நீர் மேலாணமையில் எவ்வளவு அற்புதமாக செயல்படுகிறது என்பதற்கு தேர்தல் தேதி அறிவிக்க இருந்த இரண்டு நாட்களுக்கு முன்பு அவசர கதியில் காவிரி - சரபங்கா நீரேற்றுத் திட்டம் என்ற பெயரில் சேலம் மாவட்டத்தில் ஏரிகளுக்குத் தண்ணீர் திறந்து விட்டது நல்லதொரு உதாரணமாகும். 120 கிலோ மீட்டருக்கு கால்வாய் அமைக்கும் இத்திட்டத்தில் 10 கிலோ மீட்டருக்குக் கூட பணிகள் நிறைவடையாமலேயே திட்டம் செயல்படுத்தப்பட்டுவிட்டது. மேட்டூர் அணையில் 120 அடி நீர் கொள்ளளவு எட்டிய பிறகு அதற்கு மேல் வரும் உபரி நீர்தான் இத்திட்டத்திற்குப் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது அணையில் நீர்மட்டம் 100 அடி இருக்கும் நிலையில் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை மோட்டார் மூலம் உறிஞ்சி இத்திட்டத்திற்கான கிணற்றுக்குள் விட்டுள்ளனர். தேர்தலுக்காக எடப்பாடி பழனிச்சாமி

அவர்கள் சேலம் மாவட்ட விவசாயிகளை ஏமாற்றியதோடு மேட்டூர் தண்ணீரை நம்பியுள்ள காவிரி டெல்டா விவசாயிகளுக்கு மாபெரும் துரோகத்தையும் இழைத்துள்ளார். இவருடைய அரசைத்தான் சிறப்பாகச் செயல்படுவதாக அமித்ஷா பாராட்டுகிறார். அதிமுக அரசின் மோசமான நிர்வாகத்தால் மாநிலத்தின் கடன் ரூ.5.70 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது. அரசின் அனைத்துத் துறைகளிலும் ஊழல் மலிந்து கிடக்கிறது. இதைத்தான் சிறந்த நிர்வாகம் என்கிறார் அமித்ஷா. வேலிக்கு ஓணான் தான் சாட்சி.

2019ஆம் ஆண்டு மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டிய நிகழ்வானது அந்த ஆண்டு நடந்த மக்களவைத் தேர்தலில் மக்களை ஏமாற்ற போடப்பட்ட நாடகம் என்பதற்கு இன்று வரை அந்த திட்டத்திற்கு ஒரு செங்கல் கூட எடுத்து வைக்கப்படவில்லை என்பதைத் தவிர வேறென்ன சிறந்த உதாரணம் இருக்க முடியும்? இதுவரை அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு ஒரு நயா பைசா கூட ஒதுக்கவில்லை. ஏனென்று கேட்டால் வெளிநாட்டில் கடன் கேட்டிருக்கிறோம் என்று பல்லிளிக்கிறார்கள். நிதி ஒதுக்கீட்டுக்கான திட்டமிடுதல் இல்லாமலேயே இதுபோன்ற திட்டங்களை பாஜக அரசு சொல்லி வருகிறது. உரிய நிதி கிடைக்காததால் பல திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டுள்ளதையும், இரயில்வே திட்டங்களில் தமிழகம் தொடர்ந்து வஞ்சிக்கப்பட்டு வருவதையும் நாம் கண்டு வருகிறோம்.

ஏழைகள் பக்கமே மோடி அரசு நிற்கிறது என்று இதுவரை கூறி வந்த பொய்யை இப்போது நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் போட்டு உடைத்து பாஜகவின் வேஷத்தைக் கலைத்துள்ளார். அவர் ''செல்வத்தை உருவாக்கும் முதலாளிகளை இனியும் நாங்கள் சந்தேகப்பட விரும்பவில்லை, மாறாக நாட்டின் வளர்ச்சியில் பங்கேற்க தனியாரை வரவேற்கிறோம்.'' என்றும் கூறியுள்ளார். சுயசார்பு பாரதம் பேசிய பிரதமர் மோடி அந்த எழுத்துக்களில் மீதிருந்த ஈரப்பதம் உலர்வதற்குள் 'நான்கு பொதுத்துறை நிறுவனங்களைத்தவிர, ஏனைய அனைத்து பொதுத்துறை நிறுவனங்களையும் தனியார் மயமாக்குவதற்கு உறுதி பூண்டுள்ளோம்' என மிகவும் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார். தனியார் நிறவனங்களால்தான் சிறப்பாக செயல்பட்டு நிறுவனங்களை பராமரிக்க முடியும். ஏராளமான வேலை வாய்ப்புகளை அந்த நிறுவனங்கள் உருவாக்கும். பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயம் ஆக்குவதன் மூலம் கிடைக்கும் நிதியிலிருந்து பொதுமக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.'' என்கிறார். நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். பெட்ரோலிய எண்ணெய் நிறுவனங்களிடம் விலை நிர்ணயத்தை ஒப்படைத்ததன் மூலம் ஏழை, நடுத்தர மற்றும் தொழிலாள மக்கள் என்ன ஆகிக்கொண்டிருக் கிறார்கள் என்று நேரடியாகப் பார்த்துக் கொண்டிருக் கிறோம். பெட்ரோலிய நிறுவனங்கள் தினசரி ஏற்றும் விலையை நாங்கள் கட்டுப்படுத்த முடியாது' என்று மத்திய அரசு கையை விரித்திருப்பதிலிருந்து மக்கள் நலன் மீது இவர்களுக்கு உள்ள அக்கறை புரிகிறது. பாஜகவின் அடுத்த புளுகு ஜிஎஸ்டியில் அம்பல மானது வரிகளை பொதுமக்கள் வாங்கும் பொருட்களில் ஏற்றி வரி பயங்கரவாதம் செய்ததோடு மட்டுமல்லாமல் மாநில அரசுகளுக்கு கொடுக்க வேண்டிய ஜிஎஸ்டி தொகையை இன்னும் கூட கொடுக்காமல் இழுத்தடித்து வரும் ஆளும் பாஜக அரசின் குறுகிய செயலை அதன் தோழமைக் கட்சிகளே விமர்சிக்க ஆரம்பித்துவிட்டன.

பிரதமரும் மத்திய அமைச்சர்களும் ஒருபக்கம் பொய்களை அவிழ்த்து விட்டுக் கொண்டிருக்கும் வேளையில் எடப்பாடியாரும் தானும் அதற்குச் சளைத்தவனல்ல என்று கூறுமளவிற்கு தேர்தல் அறிக்கையில் குடும்பத் தலைவிகளுக்கு மாதந் தோறும் ரூ.1500 உதவித்தொகை, குடும்பத்திற்கு ஆண்டு தோறும் 6 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசம், அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் விலையில்லா சூரியசக்தி சமையல் அடுப்பு என கவர்ச்சியான அறிவிப்புகளை அள்ளித் தெளித் துள்ளார். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட இலவச திட்டங்களும், சிறப்பு நிதியுதவிகளும் காற்றில் பறந்து கொண்டிருக்கும் நிலையில் கொஞ்சம்கூட 'இதெல்லாம் முடியுமா?' என அச்சப்படாமல் அவர் செய்துள்ள இலவச அறிவிப்புகள் பாமரனுக்கும் சந்தேகத்தை ஏற்படுத்துவனவாக உள்ளன.

'கஜா' புயலின் தாக்கத்தினாலும் வறட்சி, பருவமழை பொய்த்து போனதையும் கருத்தில் கொண்டு 2019ஆம் ஆண்டில் சட்டப்பேரவையில் பிப்ரவரி 11ல் முதல்வர் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் குறிப்பாக விவசாயத் தொழிலாளர்கள் மீன்பிடி, விசைத்தறி, கைத்தறி, கட்டுமானம், சலவை, மரம் ஏறவோர், உப்பளம், காலணி மற்றும் தோல்பொருட்கள் தயாரிப்பு, துப்புரவு, மண்பாண்டம் உள்ளிட்ட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஏழைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு சிறப்பு நிதியாக ரூ.2000 வழங்கப்படும் என்பது தான் அந்த அறிவிப்பு. 60 லட்சம் தொழிலாளர்களுக்கு தலா ரூ.2000 வீதம்

வழங்கப்படும் என்று சட்டமன்றத்தில் அறவித்து ஒதுக்கப்பட்ட ரூ.1200 கோடியை இரண்டு ஆண்டுகாலம் முடிவடைந்த நிலையில் பயனாளிகள் ஒருவருக்கும் வழங்காமல் ஏப்பம் விட்ட அதிமுக அரசு இந்தத் தேர்தலிலும் மக்களை குறிப்பாக பெண்களின் கவனத்தை திசை திருப்பவே கேஸ் சிலிண்டர், சூரிய சக்தி அடுப்பு மாதந்தோறும் ரூ.1500 உதவித் தொகை போன்ற 'இலவச' பொய்களை அவிழ்த்து விட்டு வருகிறது. கொரோனா காலத்தில் வேலைக்கு செல்ல முடியாமல் வீட்டில் முடங்கியிருந்த ஏழைகளுக்கும் தொழிலாள மக்களுக்கும் மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகை வழங்க பல கட்சிகள் மற்றும் தரப்பினரிடமிருந்து வந்த கோரிக்கைகளை எல்லாம் கஜானாவில் பணமில்லை என நிராகரித்த இந்த எடப்பாடி அரசுதான் இத்தனை இலவசங்களையும் அள்ளி வழங்குவதாக அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறது. தேர்தலில் மக்களிடம் ஓட்டுக்களை வாங்குவதற்காக எத்தனை கேவலமான செயல்களையும் இவர்கள் செய்வார்கள் என்பதற்கு இதற்கு முன் இவர்கள் சொன்ன இலவச வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளவையே சாட்சி.

2011, 2016 தேர்தல்களில் ஆட்சியை பிடித்த கட்சி அதிமுக. அதனால் அந்தத் தேர்தல்களில் அவை கொடுத்த தேர்தல்கால இலவச வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதைத் பொறுத்தே இப்போது கொடுக்கப்பட்டுள்ள தேர்தல் வாக்குறுதிகளை அவர்களால் நிறைவேற்ற முடியுமா என்பதை மக்கள் நம்புவார்கள். கடந்த இரண்டு சட்டமன்றத் தேர்தல்களில் அதிமுக கொடுத்த தேர்தல்கால உறுதிமொழிகளில் முக்கியமானவற்றைப் பார்ப்போம். அனைவருக்கும் இலவச செல்போன், கேபிள் கட்டணம் ரூ.70 ஆக குறைக்கப்படும், பொது இடங்களில் வை-பை வசதி செய்து கொடுக்கப்படும், 10 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும், திருச்சி, மதுரை, கோவையில் மோனோ ரயில் விடப்படும், ஆவின்பால் லிட்டருக்கு ரூ.25க்கு வழங்கப்படும். இந்த உறுதிமொழிகள் எவற்றையும் நிறைவேற்றாமல் இந்தத் தேர்தலில் குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1500 உதவித்தொகை, குடும்பத்திற்கு ஆண்டு தோறும் 6 சமையல் எரிவாயு சிலிண்டர்கள் இலவசம், அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் விலையில்லா சூரியசக்தி சமையல் அடுப்பு என அடுத்தடுத்த இலவச உறுதிமொழிகளை அள்ளித் தெளித்துள்ளதை நம்புவதற்கு மக்கள் என்ன இளிச்சவாயர்களா?

நாட்டில் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் சென்ற மாதம் வரை தாறுமாறாக உயர்ந்த போது அதைக் கட்டுப்படுத்து பல தரப்பிலிருந்தும் மத்திய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டன. ஆனால் அதற்கு மத்திய அரசு சொன்ன விளக்கம் ''எண்ணெய் நிறுவனங்கள் சர்வதேச விலை ஏற்றத்திற்கு ஏற்ப பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளை உயர்த்துவதாகவும் அதில் தாங்கள் தலையிட முடியாது'' என்பதாகும். ஆனால் ஐந்து மாநிலங்களுக்கு தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதிலிருந்து கடந்த 30 நாட்களுக்கும் மேலாக பெட்ரோல் டீசல் மற்றும் சமையல் எரிவாயுவின் விலை உயர்த்தப்படவில்லை. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை இப்போது ஏறாமலோ இறங்காமலோ இல்லை. ஆனால் இப்போது மட்டும் விலையேற்றம் செய்யாமல் அவற்றை மத்திய அரசு கட்டுப்படுத்தி ஏறாமல் வைத்திருப்பதிலிருந்து மோடியும் அவரது சகாக்களும் எத்தகைய பொய்யர்கள் என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது. ஐந்து மாநிலங்களில் தேர்தல் முடிந்த அடுத்த நாளிலிருந்து மீண்டும் பெட்ரோல், டீசல், எரிவாயுக்களின் விலைகள் தாறுமாறாக உயரப்போவதை வாகன ஓட்டி வாக்காளர்கள் புரிந்துதான் வைத்துள்ளார்கள்.

ஆக, ''தேர்தலில் வெற்றிபெற எத்தனை பெரிய பொய்களையும் சொல்லத் தயாராக இருக்கிறோம். எதை உண்ணச் சொன்னாலும் தயாராக இருக்கிறோம். என்ன வசைபாடினாலும் புன்முறுவலோடு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். இந்த ஒருமாத காலத்திற்கு மக்கள் எங்களை எத்தனை கழுவி கழுவி ஊற்றினாலும் அதை நாங்கள் கோபப்படாமல் துடைத்துக் கொள்வோம். ஏனென்றால் தேர்தலுக்குப் பிறகு இத்தனை தியாகங்களுக்காக நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நாங்கள் சொன்வதுதான் திட்டம், நாங்கள் போடுவதுதான் சட்டம். அப்போது நீங்களெல்லாம் அடிமட்டம்.'' என்ற அரசியல்வாதிகளின் மைண்ட் வாய்ஸ் ஒவ்வொரு வாக்காளனுக்கும் கேட்க வேண்டிய நேரமிது. வாக்காளர்களுக்கு கேட்கிறதோ இல்லையோ அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் விவசாயிகள் தொழிலாளர்கள் அனைவருக்கும் இது கண்டிப்பாகக் கேட்க வேண்டும். இலவசம் என்ற தேர்தல் காலத்துப் பொய்களில் மயங்கி ஆட்சியாளர்களை தேர்ந்தெடுப்பது என்பது நமக்கு நாமே தோண்டிக்கொள்ளும் குழி. இதை நாமனைவரும் புரிந்து கொண்டு நாட்டு மக்களுக்கும் புரிய வைத்து காட்டுவோம் நல்வழி. இலவசங்களால் மக்களை ஏமாற்றிவிட முடியாது என்பதை இந்தத் தேர்தலில் நிரூபித்துக் காட்டி தீர்ப்போம் பழி.

■

போருக்குப் புறப்படுவோம்!

நாம் யாரென்று இந்தப் பாருக்குப் பறைசாற்றுவோம்!!

# மீண்டும் 'பகை முடிக்கும் பணி முடிப்போம்'

அறிவுசார் ஆசிரியர்களே! அரசு ஊழியர்களே...!

பல காரணங்கள் தேவையில்லை ஒன்றே ஒன்று போதும்!

2006 தேர்தலுக்குப் பிறகு இந்த தலைப்பை இரண்டாவது முறையாக இப்போது 2021 தேர்தலில் கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமும் அவசரமும் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களாகிய நம் அனைவருக்கும் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு பல காரணங்களை நாம் பட்டியலிடலாம் என்றாலும் 'நாங்கள் அரசாங்கம் நடத்த ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் மூன்றாம்பட்சம்தான்' என்று அதிமுக அரசு நினைத்திருக்கும் ஒரே ஒரு காரணமே போதுமானது.

ஒரு அரசாங்கம் மக்கள் நல அரசாங்கமாக செயல்பட வேண்டுமானால் அரசாங்கத்தின் திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் சென்று சேர்க்கும் பணியினை அரசு ஊழியர்கள் இல்லாமல் மேற்கொள்ள முடியாது என்பதையும், கல்வித் தரத்தை மேம்படுத்த, அடுத்த தலைமுறைக்கான சமூகத்தை கட்டமைக்க ஆசிரியர்கள் எவ்வளவு முக்கியமானவர்கள் என்பதையும் உணராமல் ஒரு அரசு செயல்படுமானால் அது அந்த அரசுக்கு அந்திம காலமாகத்தான் இருக்கும் என்பதை கடந்த கால தேர்தல் வரலாறுகள் உணர்த்தி யுள்ளது. அந்த அனுபவம் அதிமுகவிற்கு ஏற்கெனவே உள்ளதை நாம் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

### ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் தாங்கொணா கோபம்!

கடந்த நான்கரை ஆண்டுகளில் குறைந்த பட்சம் ஒருமுறை கூட ஆசிரியர்கள் அரசு ஊழியர்களை தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் அழைத்துப் பேசவில்லை என்பது அவர் நடத்தும் அரசாங்கம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை எந்த அளவிற்கு மதித்திருக்கிறது என்பதற்கு சான்றாகும். ஆசிரியர்கள் அரசு ஊழியர்களை அழைத்துப் பேசாதது மட்டுமல்ல, அவர்கள் வாங்கும் சம்பளம் அதிகமானது என்று எந்தவித ஆதாரமும் இல்லாமல் கூட்டங்களில் பேசியதும், ஆசிரியர்களும் அரசு ஊழியர்களும் அதிக சம்பளம் கேட்டு போராடுகிறார்கள் என்று போராட்டங்களைக் கொச்சைப் படுத்தியதும் தான் எடப்பாடி பழனிச்சாமி அரசு மீது ஒவ்வொரு அரசு ஊழியருக்கும் ஆசிரியருக்கும் ஏற்பட்டிருக்கும் தாங்கொணா கோபத்திற்கான காரணமாகும்.

### கஜானாவில் பணமில்லை என்றால் வாக்குறுதிகள் எதற்காக?

ஐஏஎஸ் அதிகாரிகளுக்கும் நீதிபதிகளுக்கும் 1.1.2016 முதல் ஊதிய மாற்ற நிலவைத் தொகையை கொடுத்துவிட்டு ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் இதர பிரிவினர்களுக்கு 21 மாத நிலுவைத் தொகையை தராமல் விட்டுவிட்டது முதல் தற்போது அகவிலைப்படி, சரண்விடுப்பை காசாக்கிக் கொள்ளும் வசதி போன்றவற்றை கோவிட்டை காரணம் காட்டி நிறுத்தியுள்ளது வரை ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மீது அடுக்கடுக்கான தாக்குதல்களை தொடுத்திருக்கிறது இந்த அதிமுக அரசு. எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் அதிகமாக சொன்ன வார்த்தை கஜானாவில் பணமில்லை என்றதுதான்.

கஜானாவில் பணமில்லை என்று கபடநாடகமாடிய தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள்தான் 'வெற்றி நடை போடும் தமிழகம்' விளம்பரத்திற்காக அரசு கஜானாவிலிருந்து கடந்த இரண்டு மாதங்களாக சுமார் ரூ.2000 கோடி வரை செலவழித்திருக்கிறார். இந்த ஆண்டு பொங்கல் பரிசு ரூ.2500ல் ஆரம்பித்து அடுக்கடுக்கான சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அரசு கடனில் தத்தளிப்பதாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களிடம் நீலிக்கண்ணீர் வடித்த முதல்வர் எடப்பாடி

ஒவ்வொரு ரேஷன் கார்டுக்கும் ரூ.1500/- தருவேன் என்றும் ஒவ்வொரு கேஸ் இணைப்புக்கும் வருடத்திற்கு ஆறு எரிவாயு சிலிண்டர்களை இலவசமாகத் தருகிறேன் என்றும் உறுதிமொழிகளை அள்ளி வீசியிருக்கிறார். விவசாயக்கடன்களை விவசாய நகைக்கடன்களை நான்கரை ஆண்டுகளாக தள்ளுபடி செய்யமுடியாமல் இருந்தவரால் இப்போது தள்ளுபடி அறிவிப்பு செய்ய முடிகிறது. (தினம் ஒரு ரூபாய்தானே லிட்டருக்கு பெட்ரோல் டீசல் விலை ஏறுகிறது என்ற மத்திய அரசும் கடந்த பத்து நாட்களுக்கும் மேலாக பெட்ரோல் டீசல் விலையை எண்ணெய் நிறுவனங்கள் ஏற்றாமல் பார்த்துக் கொள்கிறது.) இவையெல்லாம் எதற்காக? நான்காண்டு ஆட்சியின் அவலங்களை மறைப்பதற்காக மட்டுமல்ல இன்னொரு ஐந்தாண்டு காலத்திற்கும் இந்த தமிழகத்தை, தமிழ் மக்களை, தமிழகத்தின் சுயமரியாதையை, தமிழகத்தின் தனித்துவத்தை மதவாத மத்திய சர்க்காரிடம் மண்டியிட்டு அடகு வைப்பதற்காக.

### பழைய வாக்குறுதிகளே நிறைவேற்றப்படாத நிலையில் வாரியிறைக்கப் பட்டிருக்கும் புதிய வாக்குறுதிகள்!

கடந்த 2016 தேர்தலில் அதிமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளில் 20 சதவீதம் கூட நிறைவேற்றப்படாத நிலையில் மீண்டும் வாக்குறுதிகளை அள்ளிவீசியிருக்கிறது அதிமுக அரசு. விலைவாசி, வேலைவாய்ப்பு, மாணவர் நலன், விவசாயிகளின் வாழ்வாதாரம், மகளிர் பாதுகாப்பு, சமூகநீதி, இட ஒதுக்கீடு போன்ற எதைப்பற்றியும் கவலைப்படாமல் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் தலைமையில் ஒரு அடிமை ஆட்சி நடந்திருக்கிறது தமிழகத்தில். காவிரி நீர் பிரச்னை, நாசகார விவசாயச் சட்டங்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டம், இட ஒதுக்கீடு மசோதா போன்ற மக்கள் விரோதச் செயல்களுக்கும் சட்டங்களுக்கும் பாரதிய ஜனதா கட்சியிடம் மண்டியிட்டு மௌனம் காத்த அரசுதான் இப்போது தேர்தல் நாடகத்தில் தன்னுடைய தேர்ந்த நடிப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

### ஓய்வூதிய ஒழிப்பு திட்டம்?

நடந்து முடிந்த நான்கரை ஆண்டுகால எடப்பாடி ஆட்சியில் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டு, அவர்தம் உரிமைகளை முடிந்தவரை சூறையாடியிருக்கிறது எடப்பாடி தலைமையிலான அரசு. ஆசிரியர்கள் அரசு ஊழியர்களின் எந்த கோரிக்கையும் ஏற்கப்படவில்லை. 2003ஆம் ஆண்டு தமிழகத்தில் அமல்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பணியாற்றி ஓய்வு பெற்றவர் எவருக்கும் ஓய்வுதியமே வழங்கப்படவில்லை. இத்திட்டத்தின் கீழ் ஊழியர்களிடமிருந்து மாதந்தோறும் வசூலிக்கப்பட்ட பத்து சதவீத ஊதியம் பல லட்சம் கோடி ரூபாய்கள் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. நீதிமன்றத்திற்கு சென்று வழக்கு போட்டும் ஊழியர் கட்டிய பணம் செட்டில் செய்யப்பட்டதே தவிர மாத பென்ஷன் உத்தரவாதம் எதுவும் வழங்கப்படாமலேயே ஊழியர்களை ஓய்வு பெற வேண்டிய இழிநிலைக்கு தள்ளியுள்ளது தமிழக அரசு.

### மக்கள் விரோத அரசு!

இந்த ஆட்சியாளர்கள் ஏழைகளின் தோழர்களுமல்ல விவசாயிகளின் காவலர்களும் அல்ல, அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நண்பர்களும் அல்லர். இவர்கள் வியாபாரிகள். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆசைகாட்டி அதன்பிறகு அரசாங்க கஜானாவை சுரண்டி சுரண்டி நாட்டையே போண்டியாக்கிவிடும் நாசகாரர்கள். இவர்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் கொடுத்துள்ள பெயர் மாண்புமிகு ஆட்சியாளர்கள். இத்தகைய நபர்கள் மத்தியில் இருந்தாலும் மாநிலத்தில் இருந்தாலும் அவர்களின் சிந்தனைப்போக்கு மக்கள் நலன் என்பதாக சிறிதளவும் இருக்காது என்பதும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் தப்பித்தவறி ஏதேனும் நடந்துவிட்டால் அது எதிர்கட்சிகளின் வாயை அடைப்பதற்காக கொண்டுவரப்பட்டதேயன்றி உண்மையான அக்கறையால் அல்ல என்பதற்கு இந்த நான்கரையாண்டு காலத்தில் நாம் கண்ட பல உதாரணங்களைச் சொல்லலாம்.

ஒருபுறம் உடலுழைப்பு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினசரி கூலி ரூ.600/- ஆக நிர்ணயிக்க வேண்டும், பட்டம் பெற்ற வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும், அரசுத்துறைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு தற்போதைய விலைவாசிக்கேற்ற ஊதிய மாற்றம் வேண்டும், விவசாயிகளின் வறுமையுடன் கூடிய வேதனையான

வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், என்றெல்லாம் பல்வேறு அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் என பலவர்க்கப் பிரிவினரும் போராடினார்கள். ஆனால், ஆட்சியாளர்களோ தங்களுக்குத் தாங்களே (நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்) வரைமுறையற்ற சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்கிக் கொண்டார்கள். உச்சமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் தேர்தல் ஆணையர்களுக்கு மாதம் ரூ.2.50 லட்சமாக சம்பளத்தை உயர்த்தி வழங்கி அதை 2016 ஜனவரி 1 முதல் முன்தேதியிட்டு வழங்கினர். ஆனால் தொழிலாளர் நலன், விவசாயிகள் நலன், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான ஊதிய மாற்ற நிலுவைகளைப் பற்றி கொஞ்சமும் அக்கறை கொள்ளவில்லை. கஜானாவில் பணமில்லை என்றவர்கள் எம்.எல்.ஏ.க்களுக்கு 110 சதவீதம் சம்பளத்தை உயர்த்தினார்கள். அரசு ஊழியர்களுக்கு நியாயமான ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தாததோடு, முரண்பாடுகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஊதியமாற்றத்திலும் தமிழகத்தில் 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை கொடுக்காமல் மறுத்தனர். விவசாயிகள், போக்குவரத்து தொழிலாளர்கள், மின்வாரிய ஊழியர்கள், மாணவர்கள் என அனைத்து பிரிவினரும் ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராடவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர்.

## "நானும் ஒரு விவசாயி"



"அய்யா நீங்க விவசாயி என்கிறீர்கள். ஆனால் உங்கள் பெயரில் விவசாய நிலம் எதுவும் இல்லையாமே. உண்மையிலயே நீங்க விவசாயியா?"

"அற்பப் பதர்கள். அவர்களுக்கு நான் டிராக்டர் ஓட்டுவது தெரியாது போலிருக்கிறது தெரிந்தால் இப்படி உளற மாட்டார்கள்"

"அய்யா, டிராக்டராவது உங்கள் பெயரில் இருக்கிறதா?"

"எழுதிக் கொள்ளுங்கள் மண்வெட்டி மட்டும்தான் என்பெயரில் உள்ளது".

அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை புதிய பென்சன் திட்டம் (CPS) திரும்பப் பெறப்பட்டு பழைய பென்சன் திட்டமே தொடரவேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. மேலும் மத்திய அரசின் 7வது ஊதிய மாற்றத்தில் பல்வேறு (Allowances) படிகள் மறுக்கப்பட்டுள்ளன. சில (Allowances) படிகள் குறைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசு ஊழியர்களுக்கு 1.1.2016 முதல் பெற வேண்டிய ஊதிய மாற்ற நிலுவைத் தொகை 21 மாதங்களுக்கு மறுக்கப்பட்டது.

### பாதிக்கப்பட்டவர்களும், பலன் பெற்றவர்களும்!

உற்று நோக்கினால் கடந்த ஐந்து ஆண்டுகளில் மத்திய ஆட்சி எடுத்த எல்லா நடவடிக்கைகளிலும் கடுமையாக பாதிக்கப்பட்டது, அன்றாடங்காய்ச்சிகளும், விவசாயிகளும், தொழிலாளர்களும், அரசு ஊழியர்களும்தான். பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகள் விண்ணை முட்டி நிற்கின்றன. எதைப்பற்றியும் கவலைப்படாமல் இவற்றின் விலைகள் நாளுக்குநாள் ஏற்றப்பட்டுக் கொண்டிருப்பதால் காய்கறி உள்ளிட்ட அத்தியாசிய உணவுப் பொருட்களின் விலைகளும் ஏகத்துக்கு உயர்ந்துள்ளன. நாட்டை தனியார் மயமாக்கினால் என்ன ஆகும் என்பதை பெட்ரோலிய நிறுவனங்கள் அன்றாடம் விலைகளை நிர்ணயிப்பதிலிருந்து ஒவ்வொரு சாமானிய மனிதனும் புரிந்து கொண்டிருக்கிறான். தனியார் மயத்தில் மக்கள் நலன்கள் புறந்தள்ளப்படும் என்ற பொதுக் கருத்தை குழி தோண்டி புதைத்து வருகிறார்கள் ஆட்சியாளர்கள். இந்தப் போக்கு

ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு மிகுந்த வெறுப்பைத் தோற்றுவித்துள்ளன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் கல்வி, காவிரி, கலாச்சாரம், பொதுசேவை வரி, மீனவர் பிரச்னை, மாணவர் எதிர்காலம், வேலை வாய்ப்பு என அனைத்துத்துறைகளிலும் மாநிலத்தின் உரிமைகள் அனைத்தும் மத்திய அரசிடம் அடகு வைக்கப்பட்டு, நிர்வாகம் சீர்கெட்டு, எத்திசையில் பார்த்தாலும் போராட்டங்களும், ஆர்ப்பாட்டங்களு மாய் கடந்த நான்கரையாண்டுகளும் முடிந்துள்ளது.

ஜி.எஸ்.டியை அமுல்படுத்துவதன் மூலம் இந்திய நாட்டில் பொருளாதாரப் பிரச்னைகளும், வெகுஜன மக்களின் பிரச்னைகளும் தீர்ந்துவிடும் என மத்திய அரசு சொன்னது. ஆனால் அது அமுல்படுத்தப்பட்ட பிறகு எல்லாம் தலைகீழாக மாறியது. மொபைல் கட்டணம், எல்.ஐ.சி. பாலிசிகளுக்கான பிரிமியம்,வங்கி மற்றும் முதலீடுகள் முதலான சேவைகள், டிடிஎச் சேவைகள், ஆன்லைன் டிக்கட் புக்கிங், சுகாதார பாதுகாப்பு பிரிமியம், பள்ளிக்கட்டணம், இரயில்சேவைகள், குளிர்பானங்கள், சிகரெட்டுகள் மற்றும் புகையிலைப் பொருட் களின் விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்துள்ளது. சாமானிய மக்கள் பயன்படுத்தும் பொருட்களின் விலைகள் உயர்ந்ததால் உற்பத்தி குறைந்து வேலையின்மை பெருகியுள்ளது. இதனால் தொழில் வளர்ச்சி, வேலையின்மை, சுற்றுலா போன்ற தொழில்களும் பாதிப்படைந்துள்ளன.

கடந்த நான்கரையாண்டுகளாக தமிழகத்தில் செயலற்ற ஆட்சியைத்தான் மக்கள் அனுபவித்து வருகிறார்கள். தமிழக மீனவர் பிரச்சனையில் இந்திய அரசு காட்டிவரும் அலட்சியம் கொஞ்சமும் மன்னிக்கமுடியாத பச்சைத்துரோகம் என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு வருகிறது. ஜல்லிக்கட்டு தடையை நீக்க மத்திய அரசிடம் கேட்டபோது, வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கிறது, உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறி எதுவும் செய்யமுடியாது என்று கூறியது. இதே மத்திய அரசுதான் காவிரியில் தண்ணீர் திறந்து விடச்சொன்ன உச்ச நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காத கர்நாடகத்தை கண்டிக்காதது மட்டுமல்ல அதே உச்சநிதிமன்றத்தில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க முடியாது என்று 7 கோடி தமிழக மக்களும் அதிர்ச்சியடையும்படி பதில்மனு தாக்கல் செய்தது. அதனை எதிர்த்துக் கேட்காமல் ஆளும் அதிமுக அரசு மௌனமாக இருந்தது. தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் ஆலையை மூட வேண்டும் என்று அந்த மாவட்ட மக்கள் நூறு நாட்களாக போராட்டம் நடத்தி னார்கள். நியாயமான முறையில் போராட்டம் நடத்திய மக்களை சிட்டுக்குருவிகளை சுட்டுத்தள்ளுவதுபோல் கண்மூடித்தனமாக சுட்டுத்தள்ளியது இந்த அரசு.

### பொருளாதார முன்னேற்றத்திற்கான எந்தத் திட்டமும் இல்லை!

தமிழக அரசில் போதிய திட்டமிடுதல் கடைபிடிக்கப்படாததாலும், தொழில் வளர்ச்சியில் அக்கறை செலுத்தாததாலும், வளர்ச்சிக்கும் வருவாய்க்குமான திட்டங்கள் வகுக்கப்படாத தாலும், அரசு கஜானா வழித்தெடுக்கப்பட்டு விட்ட நிலையில், வெறும் கையில் முழம்போடும் பசப்பும், பாசாங்கும்தான் நடந்து கொண்டிருக் கிறது. அரசு நிர்வாகம் டாஸ்மாக் விற்பனையை வைத்துத்தான் நடைபெறுகிறது என்ற நிதர்சனத்தை டாஸ்மாக் கடைகளை முற்றிலும் இழுத்து மூட முடியாத நிலை மூலம் அதிமுக அரசு உணர்த்தியுள்ளது. பொருளாதார முன்னேற்றம், பெண்கள் முன்னேற்றம், ஏழைகள் முன்னேற்றம் போன்ற தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு என்று எந்த திட்டமும் அரசிடம் இல்லை என்பதும் அப்படி எதையும் செயல்படுத்தும் எண்ணமும் இருந்ததில்லை என்பதும்தான் எடப்பாடி முதலமைச்சராக இருக்கும் தமிழக அரசின் யதார்த்த நிலையாக உள்ளது.

### ஆசிரிகள் அரசு ஊழியர்களிடம் அமைச்சர்களின் அணுகுமுறை!

புதிய ஓய்வூதியத் திட்டத்தினை திரும்பப் பெற அரசுடன் தொடர்ந்து போராடியும் போர்க்கொடி தூக்கியும் பலவித போராட்டங்களை நடத்தினோம் நாம், அரசு கண்டுகொள்ளவில்லை. தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை வேலை வாய்ப்புகளை, வாழ்வாதாரத்தை அழித்துவிடக் கூடிய அரசாணை எண்.56ஐ தீயிட்டுக் கொளுத்தி போராட்டம் நடத்தினோம். அரசு கண்டுகொள்ள வில்லை. காலிப்பணியிடங்களை நிரப்புங்கள் அப்போதுதான் அரசு அலுவலகத்தில் மக்களுக்கான பணி செய்ய முடியும் என்றோம். கவனத்தில் கொள்ளவில்லை. அரசுப்பள்ளிகளை மூடாதீர்கள் என்று சொன்னோம் காதில்

போட்டுக்கொள்ளவில்லை. 3500 சத்துணவு மையங்களை மூடாதீர்கள் என்றோம். கடுகளவும் அவர்கள் எடுத்த முடிவிலிருந்து அசையவில்லை. இவை பற்றியெல்லாம் முதலமைச்சரோ, நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சரோ, உயர்கல்வி அமைச்சரோ மக்களிடம் வாய்திறக்கவில்லை. அவர்களின் நோக்கமெல்லாம் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு எதிராக பொதுமக்களை திசைதிருப்புவதாக மட்டுமே இருந்ததே தவிர அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயமான பிரச்னைகளை கேட்டு நிர்வாகத்தை சரிசெய்ய வேண்டும் என்றோ மாணவர்கள் நலனை காக்க வேண்டும் என்றோ இல்லை.

ஆக நம்மீது ஏறி சவாரி செய்துவிட்டு நமக்கான உரிமைகளை இப்போது தருகிறோம் அப்போது தருகிறோம் என்று கூறி கழுத்தறுத்து நம்முடைய பொறுமைகளைச் சோதித்து அரசுத்துறைகளை தனியார்மயமாக்கிட அரசாணை வெளியிட்டு, இம்மாநில இளைஞர்களின் அரசு வேலை வாய்ப்புக் கனவுகளை கானல் நீராக்கிட முனைந்திட்ட மாநில மத்திய அரசுக்கு எதிராக நாம் போராடிய போது அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இக்கட்டான சூழ்நிலையில் சம்பள உயர்வு கேட்டு போராடுவதாக சித்தரித்து நம்மை முதுகில் குத்திய ஆட்சியாளர்களை தூக்கி எறிய வேண்டிய நேரம் வந்துவிட்டது. குறைந்தபட்ச மாக ஒரு பேச்சுவார்த்தைக்குக் கூட கூப்பிடாமல் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் என்ன செய்துவிடுவார்கள் என்கிற ஆணவ மனப்போக்கில் தமிழக அரசும் அமைச்சர்களும் கடைசி வரை நம்மை புறந்தள்ளியிருக்கிறார்கள்.

அரசாங்கம் நமக்கு செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்த கோரிக்கைகளை, சட்டப்படியாகவே நமக்கு கிடைக்க வேண்டி நிலுவைகளை மற்றும் அரசுத் துறைகளில் உள்ள காலியிடங்களை ஒழித்துவிட்டு கணக்கு கருவூலத்துறை போன்ற துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளில் இறங்கி எதிர்கால இளைய தலைமுறையின் அரசு வேலைவாய்ப்பு உரிமைகளை வேரறுக்க நினைத்த ஒரு அரசாங்கத்தை எதிர்த்து போராடியும் உரிய பதிலோ நிவாரணமோ கிடைக்காத நிலையில் நம் கையில் இப்போது ஒரு வலிய ஆயுதம் கிடைத்துள்ளது. ஆட்சியாளர்கள் தங்கள் தவறை உணரவேண்டுமானால் அவர்களுக்கு நாம் தக்க பதிலடி கொடுக்க வேண்டும். 2003ஆம் ஆண்டு 1,76,000 பேர் ஒரே



"பிரதமர் ஒவ்வொருவருடைய வங்கிக் கணக்கிலும் ரூ.15 லட்சம் போடுவேன் என்ற போது நம்பினீர்கள். அவர் கட்சி எங்கள் கூட்டணியில் தான் உள்ளது. நாங்கள் ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் மாதந்தோறும் ரூ.1,500/ ம் வருடத்திற்கு இலவசமாக ஆறு கேஸ் சிலிண்டர்களும் தருகிறோம் என்றால் நம்ப மாட்டீர்களா என்ன?........."

அரசாணைன் மூலம் டிஸ்மிஸ் செய்யப்பட்டு அவர்கள் அத்துணை பேரும் மீளப் பணியமர்த்தப்பட்டதும், அதனைத் தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதிகளையும் இழந்ததையும், அப்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மக்கள் பிரச்சாரம் செய்து பகை முடிக்கும் பணி முடித்ததையும் நாம் மறந்துவிடக்கூடாது. இப்போது அதன் இரண்டாம் பாகம் நடந்து கொண்டிருக்கிறது. மீண்டும் நாம் பகை முடிக்கும் பணி செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதே பாணியில் இப்போதும் நாம் மக்கள் பிரச்சாரம் செய்து நம்முடைய வேலையை கெடுக்கப்பார்த்தவர்கள் வேலைகளற்றுப் போகச் செய்ய வெஞ்சினம் கொள்ள வேண்டும். அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் சக்தி என்னவென்று உணர்த்த வேண்டும். நம்மீது கைவைத்தவர்களின் தலை மண்ணைக் கவ்வும் என்பதை தரணிக்கு இன்னொரு முறை பறைசாற்ற வேண்டும். எனவே புறப்படுவோம் தோழர்களே நமக்கான அணியின் வெற்றிக்காக

பணி செய்ய, பகை கொய்ய, படை வெல்ல நாம் ஒவ்வொருவரும் தவறாமல் பங்களிப்போம்.

**அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் இந்த அரசை ஏன் புறக்கணிக்க வேண்டும்?**

நமக்காக மட்டுமல்ல, நாட்டையும், நாட்டு நலனையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க இக்கடமையை செவ்வனே நிறைவேற்ற நாம் முன்நிற்போம். அனைத்து அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும், ஓய்வூதியர்களையும், இதரபகுதி உழைப்பாளி மக்களையும், வாக்காளப் பெருமக்களையும் ஒன்றிணைப்போம். தமிழக அரசியல் மாற்றத்தில் வரலாறு படைத்தவர்கள் என்ற சாதனையை இன்னொரு முறை நிரூபித்து தமிழகத்தின் நலன்களை உரிமைகளை மத்திய அரசிடம் அடகு வைத்துள்ள தமிழக நச்சுக்கொடிகளையும், இந்தியாவை தனியார்மயத்திற்கும், மதவாத அரசியலுக்கும் ஆட்கொள்ளப்பார்க்கும் தீய சக்திகளையும் வேரறுக்க இந்த தேர்தல் களத்தில் உறுதி பூணுவோம்.

எனவே,அரசுத்துறை பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கி கட்டுக்கடங்காத விலைவாசி வலையில் பொதுமக்களை சிக்க வைத்து நாட்டையே சீரழிக்கப்பார்க்கும் மத்திய அரசின் கைப்பாவையாக அடிவருடியாக செயல்படுவதோடு மட்டுமல்லாமல் நம்மை வஞ்சித்த, மக்கள் நலனுக்கு, சமூகநீதி கோட்பாட்டுக்கு எதிராக செயல்பட்டு வரும் அதிமுக கட்சியின் தலைமையிலான கூட்டணியை வீழ்த்தி **இன்னொரு முறை பகை முடிக்கும் பணி முடித்து அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் யாரென்று இந்தப் பாருக்குப் பறை சாற்றுவோம்.**

தேர்தல் களத்தில் நிற்கும் பல கட்சிகள் தேர்தல்கால வாக்குறுதிகளை அள்ளித் தெளித்து வருகின்றன. அவற்றில் அரசு ஊழியர்-ஆசிரியர்களின் நலனை, கோரிக்கைகளை, உரிமைகளை பாதுகாத்திட ஒரு சில கட்சிகளே உறுதியளித்துள்ளன. எந்த கட்சி, ஆசிரியர்-அரசு ஊழியர்களை மதித்து அவர்களுக்கான வாக்குறுதிகளை ஒரு பொருட்டாகக்கூட நினைக்காமல் தேர்தல் அறிக்கையினை தயாரித்துள்ளது என்பதையும் அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும், பொது மக்களும் அறிவர். நம்முடைய கோரிக்கைகளை, நம்முடைய விண்ணப்பங்களை, நம்முடைய நியாயங்களை காதுகொடுத்து கேட்டு, அவற்றை தேர்தல் அறிக்கையில் மட்டுமல்லாது தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பேசிவரும் கட்சிகளையும், தலைவர்களையும், அவர்கள் தலைமை தாங்கும் கூட்டணிகளையும் வெற்றிபெறச் செய்ய வேண்டியது இந்த நேரத்தில் அரசு ஊழியர்களாகிய நம் அனைவரின் கடமையாகும்.



"இரண்டு தொகுதிகளில் ஜெயித்தால் கூட ஆட்சியமைக்க முடியும் என்று சில மாநிலங்களில் நாம் ஏற்கெனவே நிரூபித்துக் காட்டியுள்ளோம். எனவே தொண்டர்கள் மனம் தளராமல் தொண்டாற்றி இரண்டு இடங்களிலாவது நமது கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைக்க கடுமையாக உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்".

இந்தக் கடமையை நாம் மட்டும் செய்தால் போதாது. நம் குடும்பத்தாரும் சேர்ந்து செய்ய வேண்டும். குடும்பத்தார் மட்டும் செய்தால் போதாது. நாம் குடியிருக்கும் தெருக்களில் உள்ள பொதுமக்களும் அதை செய்ய வைக்க வேண்டும். மத்தியில் உள்ளோர் சொல்கேட்டு மக்கள் நலனை மறந்து செயல்பட்ட ஆட்சியாளர்களை மக்கள் எப்படி தண்டிப்பார்கள் என்பதற்கு இந்தத் தேர்தல் ஒரு சிறந்த உதாரணமாக இருக்க வேண்டும். அதற்காக நாம் ஒவ்வொருவரும் நமக்குத் தெரிந்த அனைவரிடமும் யார் நல்ல வேட்பாளர் ? அவருக்கு நாம் ஏன் வாக்களிக்க வேண்டும் என்ற சிந்தனையை விதைத்து சமூக மாற்றத்தை ஏற்படுத்துவோம். நம்முடைய செயல் சிறியதாக இருக்கலாம். ஆனால் அது ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய பெருமை கொண்டதாக ஆக்குவோம்.

**- அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் (AISGEF)**

# நெஞ்சத்தில் அணையாத வஞ்சத்தீ

புதிய பென்சன் இரத்து
சட்டமன்ற அறிவிப்பு
அம்மாவின் ஆட்சி-அது
கானல்நீர் காட்சி
சரண்டரை நிறுத்தி
பஞ்சப்படி பறித்து
நெஞ்சை நிமிர்த்தி -இன்று
வீதிக்கு வருகிறாய்
வாக்குக்காக கையேந்தி

காலமுறை ஊதியம் கேட்டு
காலம்காலமாய் ஏமாற்றம்
ஆயிரமாயிரம் அரசு ஊழியர்
அல்லும் பகலும் போராட்டம்
அழைத்து பேச நேரமில்லை
ஏளனம் செய்தது ஒரு கூட்டம்
விண்ணை பிளந்த கோஷங்கள்
உங்கள் செவிக்கு எட்டவில்லை-உன்
தேர்தல் கால உளரல்கள்
எங்கள் செவிக்கு கேட்கவில்லை

அமைதியான போராட்டத்தில்
அடக்குமுறை தாக்குதல்கள்
முகத்தில் அடித்தாய்
முட்டியை உடைத்தாய்
முந்தானையை கிழித்தாய்
மூர்கத்தனமாக தாக்கினாய்
அய்யோ என்று அலராமல்
அகத்தில் வைத்தோம்
அணையா நெருப்பாய்

காவல்துறையை ஏவி விட்டு
குண்டாந்தடிகளால் தாக்க வைத்து
குண்டுக்கட்டாக கைது செய்து
கொக்கரித்த கோமாளி அரசே
வாழ்வாதார கோரிக்கை
போராடும் அரசு ஊழியரை
புறந்தள்ளிய அலட்சியம்
பாடம் புகட்டுவதே லட்சியம்

அடக்குமுறைக்கு அஞ்சாத
அரசு ஊழியரின் நெஞ்சத்தில்
அணையாத வஞ்சத்தீ
ஐந்தாண்டு ஆட்டத்திற்கும்
அரங்கேறும் இறுதி நிகழ்ச்சி
முடித்து வைக்க காத்திருக்கும்
அரசு ஊழியரின் ஒரு விரல் புரட்சி

— ஆர்கலி

## ஒரு விரல் புரட்சி



கறை நல்லது!
இந்தக் கறையால்
ஐந்து வருட அவமானத்தைத்
துடைத்தெறிவோம்!

# நல்லதொரு மாற்றத்தை நோக்கி தொடர்வோம் நம் பணிகளை...

"அரசியலை நாம்
தவிர்ப்போமானால்
நம்மால்
தவிர்க்கப்பட
வேண்டியவர்கள்
நம்மை ஆள
நேரிடும்"

**பிளாட்டோ**

முன்னெப்போதையும்விட வெயில் மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு தேர்தல் ஜுரத்தில் வெப்பம் வேறு அனலாய் தகித்துக் கொண்டிருக்கிறது. அது தமிழகத்தின் பல கிராமங்கள், நகரங்களை விட தலைநகராம் சென்னையில் மிக கூடுதலாகவே உள்ளது. சென்னை மாநகரம் எங்கும் தேர்தல் ஆணையமும் பல்வேறு விளம்பரங்கள் நூறு சதம் வாக்களிப்போம், என் வாக்கு என் வாழ்க்கை, என் வாக்கு விற்பனைக்கு அல்ல, **ஏப்ரல் 6-இல் வாக்களிக்களிக்க தவறாதீர்கள்** என்று பல வாசகங்களோடு பிளக்ஸ் போர்டுகள் பளிச்சிட்டுக் கொண்டிருக்கின்றன.


சென்னை மாநகரின் மையமான அந்த சந்திப்பில் தேசப்பிதா மகாத்மா காந்தி, நேரு, வஉசி, பாரதி என தேசத் தலைவர்கள் பலரின் புகைப்படம் கூடிய ஒரு விளம்பர பிளக்ஸ் போர்டு வைக்கப்பட்டுள்ளது. அதன் கீழே மாபெரும் தேசத் தலைவர்கள் போராடி பெற்றுத் தந்த சுதந்திரத்தை ஜனநாயகத்தை பாதுகாக்க அனைவரும் வாக்களிப்போம் என்று எழுதப்பட்டுள்ளது. தேச விடுதலை என்பது மகத்தான போராட்டங்களினால்தான் கிடைத்ததே என்பதை ஒத்துக் கொண்டார்களே... என்ற வகையில் பரவாயில்லை. தேச விடுதலை மட்டுமல்ல உழைப்பாளிகள் இன்று பெற்று வரும் ஒவ்வொரு உரிமையும் கூட மகத்தான போராட்டங்களின் மூலம் கிடைத்தவையே. அப்போராட்டங்களில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்கள்... துணை நின்றவர்கள்... ஆதரவுக்கரம் நீட்டியவர்கள்... என இவர்கள் எல்லோரும் போற்றுதலுக்குரியவர்களே... நம் நெஞ்சில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டியவர்களே...

இந்நிலையில் நம் முன் உள்ள அடுத்தகட்ட கடமைகளை நிறைவேற்ற களமிறங்க வேண்டிய இன்றைய சூழலில் அந்த நிகழ்வுகளையும் தீர்க்கப்படாமல் இருக்கும் பிரச்சினைகள் குறித்தும் காரணங்கள் குறித்தும் அசை போட வேண்டியது அவசியமான ஒன்றே. அந்த வகையில் நடந்து முடிந்த பல்வேறு போராட்டங்களையும் பிப்ரவரி 21இல் நடந்த கோட்டை முற்றுகை போராட்டம் குறித்து முதலில் ஆய்வு செய்வோம்.

## தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டம்

கடந்த பிப்ரவரி 2 முதல் தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டம் ஒன்பது நாட்கள் நடைபெற்றது. இந்த தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டத்தில் பல்வேறு துறைச் சங்கங்களை உள்ளடக்கிய அனைத்து துறை ஊழியர் சங்கங்களின் போராட்டக் குழுவை இணைத்துக்கொண்டு தன்னந்தனியாக நடத்திய வரலாற்று சிறப்புமிக்க முதல் போராட்டமாகும். குறிப்பாக எந்த ஒரு சங்கமும் இவ்வாறான முடிவை எடுக்காத நிலையில் சிறையில் அடைக்கப்பட்டு விடுதலையான பிறகும் மீண்டும் போராட்டத்தை தொடர்வது, விடுமுறை நாளிலும் தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டத்தினை பல்வேறு அடக்குமுறையையும் சந்தித்த பிறகும் இந்த தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டம் ஒரு மாபெரும் கம்பீரமான போராட்டமாகும்.

## பிப்ரவரி 2021 - 19ல் கோட்டை முற்றுகைப் போராட்டம்




இன்று தமிழகத்தில் கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சி

பொறுப்பில் உள்ள அதிமுக அரசு தேர்தல் பிரச்சாரத்தில், பொது மக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் ஏராளமான வாக்குறுதிகளை வழங்கினார்கள். அரசு ஊழியர்களைப் பொறுத்தவரை புதிய ஓய்வூதியத் திட்டம் ரத்து செய்யப்படும், தொகுப்பூதிய முறை ஒழிக்கப்பட்டு அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்கப்படும் என்று பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

ஆனால்... தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்த பின்னால் எந்த வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை. அன்றைய முதல்வர் ஜெயலலிதா கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இன்றைய முதல்வருக்கு ஏராளமான கடிதங்கள், கவனத்தை ஈர்ப்பதற்கு அரசு ஊழியர் சங்கம் சார்பாகவும், ஜாக்டோ-ஜியோ அமைப்பின் சார்பிலும் பலகட்ட போராட்டம் நடத்தியும், கோரிக்கைகள் நிறைவேற்றப்படவும் இல்லை. அழைத்து பேச ஏராளமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் ஒருமுறை கூட தமிழக முதலமைச்சர் அழைத்து பேசவில்லை. அரசு ஊழியர்களை ஆசிரியர்களை உதாசீனப்படுத்தினார்.

தமிழக முதலமைச்சர் மட்டும் அல்ல தலைமைச் செயலாளரை கூட சந்திக்க வாய்ப்பு அளிக்கப்படவில்லை. (இது ஆட்சியாளர்கள் அரசு தலைமைச் செயலரை அரசு ஊழியர் சங்க நிர்வாகிகளை மற்றும் ஜாக்டோ-ஜியோ நிர்வாகிகளை சந்திக்க கூடாது என்று வாய்மொழி உத்தரவு வழங்கி இருப்பதாக கூறுகிறார்கள்) அது தான் அரசு ஊழியர் சங்கம் கேட்கிறது. தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருப்பது ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசா இல்லை சர்வாதிகார மன்னராட்சியா என்ற கேள்வியின் வெளிப்பாடே இந்த ஆவேச முற்றுகைப் போராட்டம்.

இந்தப் போராட்டங்களின்போது இந்த அதிமுக அரசு பல்வேறு தாக்குதல்களை தொடுத்தது. அரசு ஊழியர் மீது குறிப்பாக காவல்துறை கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு, காவல்துறையின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களின் காரணமாக பெண் தோழர்கள், ஆண் தோழர்கள் கால் முறிவு, கை முறிவு, நெஞ்சில் குத்தப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்த நிலையிலும் முற்றுகைப் போராட்டத்தில் பங்கேற்று கைது செய்யப்பட்டு மாநில, மாவட்ட, முன்னணி ஊழியர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களை விடுதலை செய்யும் வரை போராட்டம் தொடரும் என்று மாநில மையத்தின் சார்பில் காவல் துறையோடு கடுமையான வாக்குவாதத்தில் ஈடுபட்டு பிறகுதான் சிறையில் அடைக்கப்பட்ட தோழர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த தோழர்கள் அனைவரும் விருந்தினர் மாளிகை முன் வரப்பெற்று இரவு 9 மணி வரை பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் காத்திருந்து கூட்டம் நடத்தி பின் கலைந்து சென்றார்கள்.

ஆனாலும் வக்கிர புத்தியிலுள்ள இந்த அதிமுக அரசு தொடர்ந்து ஊழியர்களுக்கு விரோதமாக இருக்கிறவரை அரசு என்ற வகையில் 5 பிரிவுகளின் கீழே 700 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அதிமுக அரசுக்கு போராட்ட வரலாறு தெரியாதவர்கள் ஆட்சியில் இருக்கிறார்கள். அனைத்து போராட்டங்களும் அடக்குமுறையில் முறியடித்து விடலாம் என்று நினைக்கிறது இந்த அதிமுக அரசு. ஒன்றை கூற விரும்புகிறோம்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவை எதிர்த்து போராட முடியாது என்று நிலவி வரும் கருத்தோட்டத்தை உடைத்து நொறுக்கிய சமரசமற்ற போராட்டம் கடந்த 2003ஆம் ஆண்டு வேலை நிறுத்த உரிமை போராட்டம். உலக அளவில் கேள்விக்குள்ளாக்கிய அதே முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்களின் அரசை எதிர்த்து மீண்டும் ஒரு காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தி உழைப்பாளிகளின் வேலை நிறுத்த உரிமையை தக்கவைத்து பல உரிமைகளை பெற்றுத் தந்த மாபெரும் போராட்டம் அது.

பெண்கள் பெருமளவு திரண்டால் அது நிச்சயம் வெற்றி பெறும் என்பதை நிரூபித்த போராட்டம், நிரந்தரமற்ற அல்லது சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்கள் வேலை நிறுத்தம் செய்ய முடியுமா? என்று கேள்வி இருக்கின்ற நிலையில் முடியும் என்று நிரூபித்த போராட்டம் அது. ஒரு சரியான அகச்சூழல், புறச்சூழல் உள்ள நிலையில் நடத்தப்பட்ட போராட்டம் அது. மேலும் நாம் நடத்திய காத்திருப்பு போராட்டம் அரசை அசைய வைத்த நல்ல விஷயமாகும்.

வரலாற்றில் எந்த ஒரு போராட்டமும் இத்தனை அரசாணைகளோடு முடிவுக்கு வந்தது இல்லை. சட்டமன்ற விதி 110ன் கீழ் வரும்

அறிவிப்புகள் என்றால் அதற்கு அரசு ஆணை வராது என்ற கருத்தும் முறியடிக்கப்பட்டது. அரசு எண் 110 விதியின் கீழ் அறிவிக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளும் நாம் முன்வைத்தவையே. விதி எண் 110ல் சொல்லப்பட்ட வாசகங்கள் அரசு ஊழியர்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் என்பதை தற்போது உள்ள முதலமைச்சரே ஒத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கும்.

அப்போராட்டத்தின் விளைவாக வெளியிடப்பட்ட விதி எண். 110ன் கீழான அறிவிப்பின் மூலம் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் ஊழியர்களின் பிரச்சனைக்கு எதிர்வரும் ஊதியக் குழு மூலம் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை இருந்தது. அதேபோல் புதிய ஓய்வூதிய திட்டம் ரத்து செய்யப்படுவதற்கான உத்தரவாதம் உருவாகியது. கருணை அடிப்படை நியமனம், பணிவரன்முறை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாணைகள் மிக முக்கியமானதாக இருந்தது. பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் நமது சங்கத்திற்கு நன்றி தெரிவித்தார்கள். இப் போராட்டத்தில் பங்கேற்ற துறைச் சங்கங்கள் அரசு இப்போராட்டத்தை சீர்குலைக்க பல முயற்சிகள் செய்த நிலையிலும் உறுதி குலையாமல் நின்றது பாராட்டுக்குரியது.

அந்த காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் நடைபெற்று கொண்டு இருக்கும்போது ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணியும் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டது. இந்த செய்தி மாநிலம் முழுவதும் போராட்ட களத்தில் இருந்த ஊழியர்கள் மேலும் உத்வேகத்தை ஏற்படுத்தியது. அதேபோல் சகோதர சங்கங்களின் ஆதரவு தெரிவித்து மிகச்சரியாக நிறைவு செய்யப்பட்ட எந்தவிதமான பாதிப்பும் இன்றி முடிவுக்கு வந்த போராட்டம் ஆகும்.

## ஆள்வோரின் அணுகுமுறையும் பிரச்சனைகளும்

தமிழக அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் இன்று நேற்றல்ல... காலம் காலமாய் ஏராளமான பிரச்சனைகளை சந்தித்து வருகிறோம். கடந்த 1937ல் சென்னை ராஜதானியில் காங்கிரஸ் சார்பில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த இராஜகோபாலாச்சாரியார் அரசின் நிதிநிலை சரியில்லை எனக் காரணம்காட்டி அரசு ஊழியர்களின் சம்பளத்தை வெட்டுவது எனத் தொடங்கி வைத்த தாக்குதல் இன்று பன்மடங்கு பெருகி விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

(உ-த - கொரோனா காலத்தில் முடக்கப்பட்ட அகவிலைப்படி சரண்டர், பொது சேமநல நிதி வட்டி குறைப்பு 6,000 கோடிக்கு மேல் அரசு ஊழியர் ஆசிரியர் ஊதியத்தில் இழந்துள்ளனர்)

## இந்த ஆட்சியில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நிலை

அரசு ஊழியர்களை பொறுத்தவரை புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டமே தொடர வேண்டும், முன்வைத்து தொடர்ச்சியாக கடந்த 17 ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருகிறோம்.

மத்திய அரசு புதிய பென்சன் திட்டத்தை 1.1.2004 முதல் அறிவித்த நிலையில் அதை இந்தியாவிலேயே முதலாவதாகக் அறிவித்த மாநிலமாக தமிழ்நாடு இருந்தது. சில மாநிலங்களில் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை அமல்படுத்தாத நிலையில் சில மாநிலங்களில் யோசித்துக் கொண்டிருந்த வேளையில் தமிழ்நாடு அரசு மட்டுமே எவ்வித யோசிப்பும் இன்றி குறிப்பிட்ட 9 மாதத்துக்கு முன்பே அதாவது 1.4.2003 தேதி முதல் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை அமுல்படுத்தியது. அதை திரும்பப் பெற வலியுறுத்தி கடந்த 17 ஆண்டுகளாக அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் அரசுக்கு கோரிக்கைகள் மூலமாக இயக்கங்களை நடத்தி வருகிறோம்.

முன்னாள் முதல்வர் ஜெயலிதா அவர்கள் 2011 சட்டமன்ற தேர்தலின் போது தேர்தல் வாக்குறுதியாக அதிமுக ஆட்சிக்கு வந்தால் புதிய ஓய்வூதியத் திட்டம் திரும்பப் பெறப்படும் என்று தெரிவித்து ஆட்சிக்கு வந்தார். ஆனால் அவர் இருக்கும் காலத்திலேயே அவருக்கும் பின்பு அவருடைய ஆட்சி தொடங்கவிருந்த நிலையில் அவர் கொடுத்த உத்தரவாதம் நிறைவேற்றப்படவில்லை. மேற்கு வங்காளத்தில் மட்டும் புதிய ஓய்வூதிய திட்டம் நடைமுறையில் இல்லாததையும், அதைத் தொடர்ந்து டெல்லி முதல்வர் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவிப்பு வெளியிட்டிருப்பதாக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும் அது குறித்து அரசு எதுவும் அக்கறை கொள்ளவில்லை.

2003ஆம் ஆண்டு முதல் அரசு ஊழியர்கள்

செலுத்திவரும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு 10 சதவீத ஊதியத்தை அரசு இதுவரை பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின் ஒழுங்காற்று ஆணையத்திடம் கொடுக்கவில்லை. புதிய ஓய்வூதிய திட்டத்தினை அமல்படுத்துவதுதான் அம்சம் என்பது அந்தந்த மாநில அரசுகள் முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்று மத்திய அரசு அறிவித்துள்ள நிலையில் கடந்த 17 ஆண்டுகளாக தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் செலுத்தியுள்ள பங்களிப்பு ஓய்வூதியத்தை அரசாங்கம் வேறு திட்டங்களுக்கு செலவிட்டுள்ள நிலையின் காரணமாக அது இன்றும் மத்திய அரசின் ஓய்வூதிய ஒழுங்காற்று ஆணையத்திடம் செலுத்தப்படாமல் உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை பழைய ஓய்வூதிய திட்டத்தின்கீழ் கொண்டு வருவதன் மூலம் அந்த நிதியை பொது வைப்பு நிதியில் சேர்த்து விடலாம். ஆனால் அரசு தரப்பில் எவ்வித முயற்சியோ முன்னேற்பாடோ இல்லை. மாறாக புதிய பென்சன் திட்டமே தொடரும் என அறிவிப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. இது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை இந்த அரசு நம்பிக்கை கொடுத்து கைவிட்ட கதையாக உள்ளது.

இத்திட்டத்தில் 5.52 லட்சம் பேர் சேர்ந்துள்ளார்கள். ஊழியர்களின் பங்களிப்பு 28 ஆயிரம் கோடிக்கு மேல் சேர்ந்துள்ளன. இறந்தால் குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை கிடையாது. ஓய்வு பெற்றால் 20 ரூபாய் பத்திரத்தில் எழுதி வாங்கிக்கொண்டு அதாவது இனிமேல் பென்சன் கோர மாட்டேன், வழக்குகள் போட மாட்டேன் என்று எழுதிக் கொடுத்து தான் ஊழியர்கள் கட்டிய பணம் (Onetime Settlement) அரசு பங்களிப்பு பணம் பெற முடியும். ஆனால் ஒரு நாள் சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினராக இருந்து இறந்தால் அல்லது பதவி காலம் முடிந்தால் வாழ்நாள் முழுவதும் பென்சன், குடும்பப் பென்சன் வழங்கப்படுகிறது. சமூகப்பாதுகாப்பு இருக்கிற பழைய பென்சன் பெற்றிட வேண்டும்.

## சிறப்பு காலமுறை ஊதியம் பெறுவோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குதல்

நாட்டில் பல்துறையின் பணி செய்பவர்கள் பல தலைமுறைகளாக கொத்தடிமை முறை கூலிகளை பெற்று வருகிறார்கள். தமிழ்நாட்டில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கொத்தடிமை கூலி முறையை ஒழிப்போம்... நிச்சயம் அவர்களை கரை சேர்ப்போம்... என்று கடந்த 10 ஆண்டுகளாக ஆட்சியில் உள்ள அதிமுக அரசு கூறியது. ஆனால் 1982இல் தொடங்கப்பட்ட சத்துணவு திட்டத்தின் கீழ் பணிபுரியும் ஊழியர்களுக்கு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், MRB செவிலியர்கள், சமூக வன பாதுகாவலர்கள் உள்ளிட்ட 3.5 லட்சம் ஊழியர்கள் பதவி உயர்வு, பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர். இவர்களைப் போன்று சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று குறைந்தபட்சம் வருவாயில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவருக்கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும் என அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து போராடி வருகிறது.

## 21 மாத நிலுவைத் தொகை

2014ஆம் ஆண்டில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்த திரு ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், அம்மா முன்னிலையில் சட்டமன்றத்தில் 2014ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையை வாசித்தபோது, 2016-17ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது.

முந்தைய ஊதியக் குழுக்கள் போலன்றி இக்குழுவின் பரிந்துரை உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும், பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத் தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது என தெரிவித்திருந்த நிலையில் அம்மா வழியில் செயல்படுவதாக அறிவித்துள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1.1.2016ஆம் தேதி முதல் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையை கருத்தியலாக மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு ஊதிய மாற்றத்தை அமுலாக்கியுள்ளது.

அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கு மிகப்பெரிய ஊதிய இழப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசு ஊழியர்கள் 1.1.2016 முதல் ரொக்கமாக பெற்றுள்ள நிலையில் தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்களது

21 மாத நிலுவை தொகையை இழக்க வைத்துள்ள செயலானது இதனால் ரூ. 25 ஆயிரம் கோடியை தமிழக அரசு ஆசிரியர்கள் இழந்துள்ளனர்.

அதேபோல் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் மற்றும் படிகளும் வழங்கப்படவில்லை. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கியுள்ளதாக அரசாணையில் குறிப்பிட்டிருந்தாலும் குறைந்தபட்ச ஊதியம், அனைத்து நிலையிலும் ஊதியம், வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, கல்விப்படி, குறைந்தபட்ச ஓய்வூதியம், பல்வேறு சலுகைகளில் சிலவற்றை கூட வழங்காமல் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள்.

மக்கள் நலனிலும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனிலும் அக்கறை கொண்டுள்ளதாக கூறும் அதிமுக அரசு மத்திய அரசுக்கு இணையான ஊதியம் மற்றும் படிகளை வழங்க தொடர்ந்து மறுத்து வருகிறது.

## குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் குறைந்தபட்ச ஓய்வூதியம்

மத்திய அரசு அமைத்த 7வது ஊதிய குழு தற்போதைய விலைவாசி நிலை மற்றும் இதர அடிப்படை காரணிகளை ஆய்ந்து குறைந்தபட்சம் ரூ. 18,000 என பரிந்துரை செய்ததன் அடிப்படையில், மத்திய அரசு அடிப்படை ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.18,000 என நிர்ணயித்து வழங்கி வரும் நிலையில், மாநில அரசின் ஊழியர்களுக்கு எந்தவிதமான அடிப்படையின்றி குறைந்தபட்ச ஊதியமாக ரூ.15,700ஆக நிர்ணயித்துள்ளது.

அதேபோல் மத்திய அரசு ஊழியர் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.9000ஆக உள்ள நிலையில் தமிழக அரசு ஊழியர்களுக்கு ரூ.7850ஐ குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்துள்ளதும், அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளாகும். எனவே குறைந்தபட்ச ஊதியம் ரூ.18000, குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.9000, மத்திய அரசுக்கு இணையாக வழங்க தொடர்ச்சியான போராட்டம் நடத்திக் கொண்டு வருகிறோம்.

இந்த அதிமுக அரசில் தமிழகம் முழுவதும் பலவிதமான ஜனநாயகபூர்வமான போராட்டங்கள் தொடர்ச்சியாக நடந்துகொண்டு இருக்கிறது. இன்றைக்கு அரசு ஊழியர் போராட்டம், ஆசிரியர்கள் போராட்டம், மருத்துவர் போராட்டம், செவிலியர்கள் போராட்டம், சத்துணவு ஊழியர்கள் போராட்டம், அங்கன்வாடி ஊழியர்கள் போராட்டம், போக்குவரத்து ஊழியர்கள் போராட்டம், மாணவர்கள் போராட்டம், விவசாயிகள் போராட்டம். ஆனால் இந்த போராட்டத்திற்கான முழுமையான தீர்வை ஆட்சியாளர்கள் தரவில்லை. ஜனநாயகத்தை கிஞ்சிற்றும் மதிக்காத ஒட்டுமொத்த ஜனநாயகத்தையும் குழி தோண்டி புதைக்க முயற்சிக்கிறார்கள்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் போராடினால் நிதி இல்லை என தொடர்ந்து சொல்லி வந்தாலும் (அதிமுக அரசு 2011 இரண்டாவது முறையாக ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது தமிழக அரசு கடன் 1.18 லட்சம் கோடி இன்று 5.70 லட்சம் கோடி கடன், பிறக்கும் குழந்தைக்கு 57,500 கடன் உள்ளது) தமிழக முதல்வரும் தமிழக அரசும் இது உண்மையல்ல என்பது மக்களுக்கு தெரியும்.

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நியாயமான ஊதியம் கோரியும் ஊதிய முரண்பாடுகளை களையக் கோரியும் போராடினால் அரசின் வருவாய் முழுவதும் சம்பளத்திற்கே சென்று விடுகிறது என தவறான உண்மைக்கு புறம்பான செய்திகளை மக்கள் மத்தியில் அதிமுக அரசே பரப்பி வருகிறது. அதுமட்டுமல்லாது அரசே புதிய ஊதிய முரண்பாடுகளை திட்டமிட்டு உருவாக்கி பிரச்சினைகளை திசை திருப்பி விடுகிறது.

தமிழக அரசு ஊழியர்களின் ஊதிய முரண்பாடுகளை சித்திக் அவர்கள் தலைமையில் அமைத்தபோது அரசு ஊழியர் சங்கம் அதனிடம் துறைவாரி சங்கங்களின் கோரிக்கைகளையும் கேட்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தது. அதன்படி துறைவாரி சங்கங்களை அழைத்து பேசி ஒரு நபர் கமிஷன் சில பிரிவுவாரி சங்கங்களின் கோரிக்கைகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு 35 அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது. ஊதிய மாற்ற முரண்பாடு மற்றும் குறை தீர்க்கும் ஒரு நபர் குழுவின் குறைகள் தீர்ந்த பாடில்லை.

அரசின் கடைசி நேரத்தில் திரைமறைவு திருவிளையாடல் 26.2.2021ஆம் தேதி சட்டமன்ற கூட்டத் தொடர் நடைபெறுவதற்கு முன்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 19.2.2021ஆம் தேதி நடத்திய கோட்டை முற்றுகை போராட்டத்தின்போது எல்லா பிரிவினருக்கும் அரசாணைகள் வெளியிட்டிருக்க வேண்டிய அரசு நிதி அரசாணைகள் மட்டும் வெளியிட்டிருப்பது

பாதிக்கப்பட்டு நிவாரணமின்றி இருக்கும் ஏனைய பிரிவினரிடையே இந்த அரசின் மீது தீராக் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒருசில பிரிவினருக்கு மட்டும் கிடைத்துள்ள நிதி பாதிக்கப்பட்டுள்ள அனைத்து அரசு ஊழியர்களுக்கும் கிட்ட வேண்டும் என்பதே அரசின் நிலையாக இருந்திருக்க வேண்டும். அந்த வகையில் மீண்டும் ஒருமுறை அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை வஞ்சித்துள்ள இந்த அரசின் கடைசி நேர திரைமறைவு வேலைகளுக்கு நடைபெறவிருக்கின்ற ஏப்ரல் 6ல் ஜனநாயக திருவிழாவில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தக்க பாடம் கற்பிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

## வேலையின்மை

உலகில் அதிக இளைஞர்கள் உள்ள நாடு இந்தியா. தற்போது 45 ஆண்டுகள் இல்லாத வேலைவாய்ப்பின்மை உருவாகி இருக்கிறது. மத்திய அரசு நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம் எனவும் மாநில அதிமுக அரசு தேர்தல் வாக்குறுதியில் ஆண்டுக்கு 2 லட்சம் பேருக்கு வேலை தருவோம் என்று சொன்னது. ஆனால் இன்றைய இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் தலா ஒரு கோடியே 30 லட்சம் பேர் படித்து முடித்து வேலை வாய்ப்புக்கு காத்திருக்கின்றார்கள். இதற்கேற்ற புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க மத்திய, மாநில அரசுகள் முயற்சிக்கவில்லை.

மேக் இன் இந்தியா, ஸ்டார்ட் ஆப் இந்தியா, ஸ்கில் இந்தியா, முத்ரா வங்கி திட்டம் என கவர்ச்சிகரமான பல திட்டங்களை அறிவித்தாலும் உண்மையில் அவை பெரிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவில்லை. (உ-த நமது பிரதமர் அவர்கள் இளைஞர்கள் மத்திய, மாநில அரசு பணியை எதிர்பார்க்கக் கூடாது. சுய தொழிலாக பக்கோடா, பானி பூரி விற்று பிழைத்துக் கொள்ளுங்கள் என்கிறார் என்ற விவரம் பத்திரிகையில் வெளிவருகிறது) மறுபக்கம் ஓராண்டுக்கு மேலாக காலியாக உள்ள அரசு பணியிடங்களை மாநிலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்புகிறது.

தமிழகத்தில் நாலரை லட்சத்திற்கு மேல் அரசு துறைகளில் காலி பணியிடம் இருக்கிறது. இதை பூர்த்தி செய்யாமல் அதிமுக அரசு, அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை நிதி நெருக்கடியை காரணம்காட்டி கொரோனா காலத்தில் 58-59 வயதாக உயர்த்தியது. அதைத் தொடர்ந்து 2021 பிப்ரவரியில் 59ல் இருந்து 60 வயதாக உயர்த்தியுள்ளது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் மிகுந்த அதிர்ச்சி ஏற்படுத்தியுள்ளது. இதனால் பதவி உயர்வு மறுக்கப்பட்டுள்ளது. இனி வரும்காலங்களில் ஓய்வு பெற்றால் ஓய்வூதியம் கிடைக்குமா என்பதே கேள்விக்குறி? எந்த ஒரு அரசு ஊழியரும், ஆசிரியரும் இந்த வயது உயர்வை ஏற்றுக் கொள்ளவில்லை. எந்த அமைப்புகளும் கோரிக்கை வைக்கவில்லை. இவ்வாறு இருக்க அதிமுக அரசு படித்த இளைஞர்களுக்கு சமூக அநீதி இழைத்துள்ளது.

அதேபோல் இளைஞர்களை சமூக விரோதியாக மாற்றும் வேலைகளை மத்திய, மாநில அரசுகள் தொடர்ந்து செய்து கொண்டு இருப்பது மட்டும் அல்லாமல் தமிழக மக்கள் தொகையில் ஏராளமான அறிவோடும், திறன்களோடும் இருக்கக்கூடிய பெருபகுதி இளைஞர்களுக்கு அரசு வேலை எட்டாக்கனியாகவும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு அரசின் திட்டம் என்ன? என்பது கேள்விக்குறியாக உள்ளது.

## தனியார்மயமாகும் பொதுத்துறை

ரிசர்வ் வங்கி, எல்ஐசி, பொதுத்துறை நிறுவனங்களை வளங்கொழிக்கும் இயந்திரமாக அரசு பயன்படுத்துகிறது. இதனால் பொதுத்துறை நிறுவனங்களை ஏலம் மூலமாகவும், 100% வெளிநாட்டு மூலதனத்தை அனுமதிப்பதன் வாயிலாக தனியாருக்கு கொடுக்கிறது. ரயில்வே, பாதுகாப்பு, நிலக்கரி, சுரங்கங்கள், வளங்கொழிக்கும் பெட்ரோலிய நிறுவனங்கள், 41 ராணுவ தளவாட ஆலைகள், தொலைபேசி, ஏர் இந்தியா, சாலை போக்குவரத்து, மூன்று வேளாண் சட்டங்கள் மூலம் விவசாயம் தனியார்மயம், மாநில அரசும் மறுசீரமைப்பு என்ற பெயரில் பல்துறைகளில் தனியார்மயத்தை கொண்டு வந்துள்ளது. (உ-த கருவூலத்துறை தனியார் துறை விப்ரோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது)

கடந்த பிப்ரவரி 24ஆம் தேதி பிரதமர் மோடி தனியார்மயமாக்கல் ஏன் காலத்தின் கட்டாயம் என்பதற்கான விளக்கத்தினை நீண்ட உரையாக வழங்கியுள்ளார். அதில் முக்கியமாக அவர் குறிப்பிட்டது - தொழில் செய்வது அரசின் வேலை இல்லை அதாவது தொழில் சார்ந்த

நடவடிக்கைகளில் அரசு ஈடுபடத் தேவையில்லை, அரசின் பொறுப்பு அதன் குடிமக்களுக்கு நல்வாழ்வை உறுதி செய்வதுதான் என்றார். இந்த பேச்சுக்கு எதிர்ப்பு குரல்கள் வழக்கத்தைவிட தீவிரமாக தொடங்கியிருக்கின்றன.

பிரதமர் மக்களின் வாழ்வை உறுதி செய்வது என்றால் ஒருசில புள்ளி விவரங்கள் பத்திரிகையில் வருகிறது. உலக பட்டினி நாடுகளில் 107 - இந்தியா 94வது நாடு, உலகில் மருத்துவ வசதியில் 155வது இடத்தில் உள்ளது, மிகக் குறைந்த அளவில் அதாவது இந்தியாவில் ஜிடிபியில் சுகாதாரத்திற்கு 1.5% நிதி ஒதுக்கீடு, உலகில் சுத்தமான தண்ணீர் கிடைக்கும் நாடுகளின் வரிசையில் 122 நாடுகள் உள்ளது. அதில் இந்தியா 120வது இடத்தில் இருக்கிறது. உலகிலேயே விவசாயிகள் தற்கொலை இந்தியாவில்தான் அதிகம். இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இவ்வாறு இருக்க தனியார்மயமாக்கினால் சந்தையின் கட்டுப்பாட்டை அரசு நழுவவிட்டதில் விலைவாசி உயர்வு பற்றாக்குறை பதுக்கல் போன்றவை அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. அதேபோல் தொழிலாளர் சுரண்டல் வேலையின்மை பணி அழுத்தம் போன்றவை அதிகரிக்கும்.

இன்னும் அரசுப் பள்ளிகளும், அரசு மருத்துவமனைகளும் கொஞ்சம் மிச்சமிருப்பதால் தான் ஏழை நடுத்தர மக்களின் வாழ்வு ஓரளவேனும் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவர்களுக்கான மிச்சத்தையும் எடுத்துவிடும் பட்சத்தில் மக்களின் கதி என்ன என்பதுதான் கேள்வி (உ-த கொரோனா காலத்தில் அரசு மருத்துவமனைகள் தான் ஏழை எளிய மக்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்)

## அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் ஆற்ற வேண்டிய கடமை

2019 ஜனவரி 22ஆம் தேதி முதல் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் கூட்டமைப்பான ஜாக்டோ-ஜியோ காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டம், அதைத் தொடர்ந்து 2020 போராட்டமும், 2021 பிப்ரவரியில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கோட்டை முற்றுகை போராட்டத்தையும் கையிலெடுத்தது இந்த போராட்டம் சமூக நலனுக்கானதும் எதிர்கால இளைஞர்களின் கௌரவமான வாழ்க்கைக்கானதுமானது என்கிற உண்மை நிலை மறைக்கப்பட்டு இது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் சம்பள உயர்வுக்கான போராட்டம் என்று பொய் பிரச்சாரத்தினாலும் போலி அறிக்கையிலும் மக்களின் வெறுப்புக்கான போராட்டமாக இந்த ஆட்சியாளர்களால் சித்தரிக்கப்பட்டது.

தமிழக இளைஞர்களின் எதிர்காலத்தை வேலை வாய்ப்புகளை வாழ்வாதாரத்தை அழித்துவிடக்கூடிய ஆதிசேஷய்யா குழுவின் பரிந்துரையை நிராகரிக்கப்பட வேண்டும் எனவும், காலிப் பணியிடங்களை நிரப்புங்கள், அப்போதுதான் அரசு அலுவலகத்தில் மக்களுக்கான பணி செய்ய முடியும் என்றோம். அரசு கவனத்தில் கொள்ளவில்லை. அரசு பள்ளிகளை மூடாதீர்கள் என்றோம். காதில் போட்டுக் கொள்ளவில்லை. சத்துணவு மையங்களை மூடாதீர்கள் என்றோம். முடிவிலிருந்து அசையவில்லை. முதலமைச்சரோ, நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சரோ, துணைமுதல்வரோ மக்களிடம் வாய் திறக்கவில்லை. அவர்களின் நோக்கம் எல்லாம் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் நியாயமான பிரச்சனைகளை கேட்டு தீர்க்க வேண்டும் என்று நினைக்கவில்லை.

அதற்கு மாறாக அரசாங்கம் நமக்கு செய்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்த கோரிக்கைகளையோ, சட்டப்படி கிடைக்க வேண்டிய நிலுவைகளையோ வழங்கவில்லை. மேலும் அரசுத் துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளில் இறங்கி எதிர்கால இளைய தலைமுறையின் அரசு வேலைவாய்ப்பு உரிமைகளை வேரறுக்க நினைத்தது.

அரசு ஊழியர் ஆசிரியர் மீது துறை ரீதியான நடவடிக்கை, காவல் துறை நடவடிக்கை, கட்டாய பணி மாறுதல், உயர்நீதிமன்றமும் மாநில முதல்வரும் கேட்டுக் கொண்டதன் பேரில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தங்கள் போராட்டத்தை விலக்கிக் கொண்ட பிறகும் அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை, காவல் துறை வழக்கு இத்தனையும் சந்தித்து தொடர்ச்சியான போராட்டம் அதிமுக ஆட்சி கடைசி நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்கு பிறகு பிப்ரவரி 2021, 1ஆம் தேதி அரசு ஊழியர் ஆசிரியர்கள் எடுக்கப்பட்ட அத்தனை ஒழுங்கு நடவடிக்கைகளும் ரத்து செய்வதென அறிவித்தார் முதலமைச்சர். கடந்த

கால துயரங்களை துன்பங்களை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மறந்து விடக் கூடாது.

ஆட்சியாளர்கள் தங்கள் தவறை உணர வேண்டுமானால், 2003ல் 176000 பேர் ஒரே அரசாணையில் மூலம் டிஸ்மிஸ் செய்யப்பட்டபோது அவர்கள் அத்தனை பேரும் மீண்டும் அதே இடத்தில் பணி அமர்த்தி அதனைத் தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் தக்க பாடத்தைத கற்பித்தோம் அதையும் மறந்துவிடக் கூடாது.

தேர்தல் ஆணையம் வாக்காளர்கள் அனைவரும் நூறு சதவீதம் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று ஊடகங்கள் மற்றும் சமூக வலைதளங்கள் மூலமாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் நிலையில் தேர்தல் பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வரும்ம நாம் ஜனநாயகக் கடமையிலிருந்து விலகாமல், சார்புத் தன்மையற்ற நேர்மையான தேர்தலை நடத்திக் கொண்டும், வல்லமை படைத்த சக்தி என்பதை மறந்துவிடக் கூடாது.

அதேசமயம் தேர்தல் பணிகளில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரும் தங்கள் வாக்குகளை தபால் வாக்குகளாக செலுத்தும் கடமையிலிருந்து பின்வாங்காமல் வாக்களித்து நூறு சதவீதம் தபால் வாக்குகள் பதிவாவதை உறுதி செய்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு ஓட்டு தானே என்று அசட்டுத்தனமாக இல்லாமல் நம்முடைய ஒவ்வொருவருடைய ஓட்டும் ஜனநாயகத்தின் தலையெழுத்தை மாற்றும் தன்மை கொண்டது என்பதை உணர்ந்து தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தவறாமல் தபால் வாக்குகளை நூறு சதவீதம் செலுத்திடக் கேட்டுக் கொள்கிறோம். பல தருணங்களில் தபால் வாக்குகள்தான் தேர்தல் முடிவுகளை மாற்றி அமைத்திருக்கின்றன என்கிற புரிதலோடு படித்த பண்பட்ட வர்க்கமான நாம் 100% தபால் வாக்கு செலுத்துவதையும் இயக்க நடவடிக்கையாக மேற்கொண்டு நம்முடைய ஜனநாயகக் கடமையை தவறாமல் நிறைவேற்றுவோம்.

## நம் கடமை என்ன?

இந்த வரலாற்று பின்னணியை நாம் உணர்ந்து நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் நம்முடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளது. வீதிமன்றத்திலும் நாம்

## அஞ்சல் வாக்கு

தேர்தல் பணி முக்கியம்
அஞ்சல் வாக்கு அதனினும் முக்கியம்
முன்னது கடமை
பின்னது உரிமை

கடமையில் கண்ணாயிருந்து
உரிமையில் கோட்டை விடுதல்
கோட்டைக்குக் கேட்டைத் தருதல்

தும்பை விட்டு
வால் பிடித்தல்
வம்பை மீண்டும்
விலைக்கு வாங்குதல்

அஞ்சல் வாக்கு
சிவப்பு நாடாத் தன்மையது
கொஞ்சம் கவனப் பிசகும்
வஞ்சம் தீர்க்க வாய்ப்பு விலகும்

அட்சரம் பிசகாமல்
அஞ்சல் வாக்கை
முறையாய் செலுத்துதல் நன்று
அதுவே முத்திரையாகும் வென்று

உமது வாக்கு மட்டுமே இலக்கன்று
சுற்றமும் நட்பும்
இல்ல நிகழ்ச்சிகளுக்கு மட்டுமன்று
அல்லக் கைகளின் ஆட்சிக்கு முடிவு
சுற்றமும் நட்பும் சேர்ந்தாலே
கிட்டும் விடிவு

பகை முடிக்கும் பணி
2004ல், 2006ல் முடிந்தது
2011ல் 2016ல் காத்த அசிரத்தை
2021ல் கூட்டியது சிரத்தை

செல்லாத வாக்கு
இல்லாமலாகட்டும்
பொல்லாத ஆட்சிக்கு
முடிவுரை எழுதட்டும்

ஒன்றுகூட விடாமல் செலுத்துவோம் வாக்கு
நன்று கூடும் மாற்றம் வெல்லுவோம் நோக்கு

- பெரணமல்லூர் சேகரன்

நடத்துகின்ற போராட்டங்கள், எவ்வளவு வலுவாக இருக்கிறதோ அதற்கு இணையாக சட்டமன்றத்திலும் வலுவான குரல் ஒலிக்க வேண்டிய அவசியம் என்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. அந்தக் குரல்களை வலுப்படுத்த மக்கள் நலனில் அக்கறையுள்ள வர்களை தேர்வு செய்ய வேண்டியது ஒவ்வொரு குடிமகனின் அடிப்படை கடமையாகும். அந்த வகையில் அரசியல் கட்சிகளின் தேர்தல் அறிக்கையில் நமது வாழ்வாதார கோரிக்கைகளாக புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்து பழைய வரையறுக்கப்பட்ட பென்சன் வழங்கப்படும், 21 மாத நிலுவைத் தொகை வழங்கப்படும், சரண் விடுப்பு, முடக்கப்பட்ட அகவிலைப்படி, வருங்கால வைப்பு நிதி வட்டி, சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர் மற்றும் தொகுப்பூதியத்தில் உள்ள ஊழியர்கள் அனைவருக்கும் காலமுறை ஊதியம் வழங்கப்படும், 12 மாதம் மகப்பேறு விடுப்பு, பட்டப்படிப்புக்கான ஊதிய உயர்வு, நிர்வாக தீர்ப்பாயம், இடைநிலை ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்ட மத்திய அரசுக்கு இணையான ஊதியம், தினக்கூலி அடிப்படையில் 10 ஆண்டுகள் பணிபுரியும் அரசு ஊழியர்களை நிரந்தரப்படுத்தப்படும், அரசுத் துறையில் உள்ள மூன்றரை லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும், பறிக்கப்பட்ட உரிமைகள் திரும்பத் தருவோம் என்று பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை அறிவித்துள்ள அரசியல் கட்சிகளை இனம் கண்டு மேற்கண்ட உண்மைகளை உணர்ந்து அத்தகைய உயர்வுகளோடு ஏப்ரல் 6 அன்று நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில் நாம் அனைவரும் குடும்பத்தோடு வாக்களிக்க உறுதியேற்போம். தபால் வாக்குகளை தவறாமல் பதிவு செய்தி முழு முயற்சி செய்வோம்.

தோழர்களே

இண்டர்நெட், பாஸ்ட் புட் என்று பாய்ச்சல் வேகத்தில் ஓடுகிற சமகாலத்தில்தான்... விரும்பியவளை மணந்து கொண்ட இளைஞன் வெட்டிக் கொல்லப்படுகிறான்.

கந்து வட்டி அரக்கனின் கொடூரக் கரங்களில் சிக்கி தமிழக விவசாயி நாள்தோறும் தற்கொலை செய்து கொள்கிறான் வாழ்வாதாரத்தை இழந்து உலர்ந்துள்ள மனிதர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் தொடுத்து வருபவர்கள், எது குறித்தும் அக்கறையற்று மீண்டும் மீண்டும் அரசமைக்க கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கிறார்கள்.

நடப்பதையெல்லாம் மக்கள் வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவலங்களை கண்டு நாம் அவநம்பிக்கை கொள்ள வேண்டியதில்லை.

ஆம் எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்த நம்மை இங்கே சந்தித்துக் கொள்ள... ஒருவரையொருவர் புரிந்து கொள்ள... வைத்தது மகத்தான இந்த ஸ்தாபனம்

அதன் கீழான வாழ்வின் காலங்களை அசை போடும்போது போராட்டங்களும்

சோதனைகளும் களப்பணியில் நாம் சந்தித்த அனுபவங்களும் சுகமாய் இருக்கின்றன.

சுகமான அந்த அனுபவங்கள் தரும் உத்வேகத்தில்

நாம் அனைவரும் ஒன்றிணைந்து

எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும்

வெற்றியை மட்டுமே சந்தித்திருக்கிறது.

அந்த வகையில் நமது வாக்கும் ஒட்டுமொத்த தமிழக மக்களின் பல கோடி வாக்குகளும் இணைந்து நல்லதொரு மாற்றத்தை மலரச் செய்யும் என்ற நம்பிக்கையோடு நாம் பணிகளை மேற்கொள்வோம்.

## வாக்குகள் விற்பனைக்கல்ல!



"தம்பி எங்க போயிட்டீங்க மூணு நாளா உங்களைத் தேடிக்கிட்டிருகோம்".

"என்னாச்சு எதுக்காக சார் என்னைத் நீங்க தேடறீங்க?"

" உங்க வீட்டுல ஆறு ஓட்டு இருக்குதுங்களே அதுக்காகத் தான்".

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க போராட்ட களத்தின் ஒரு மைல்கல் 2021

அரசு ஊழியர் சங்கம் 1984 துவங்கப்பட்டது தனது சங்கப் பயணத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க போராட்டங்களை நடத்தி உள்ளது.

## 1988ஆம் ஆண்டு போராட்டம்

1988ஆம் ஆண்டு போராட்டம் மகத்தான வரலாறு படைத்த போராட்டம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் இணைந்து உற்சாகத்துடனும் நம்பிக்கையுடனும் வேலை நிறுத்தம் சக்தியாக நடந்தது. மிகசிறப்பான 31 நாட்கள் உற்வேகத்தோடு நடந்தது. ஆளுநர் அலெக்சாண்டர் பல்வேறு அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட்டார், குதிரைபடையை அனுப்பி மிரட்டினார் வீரபெண்கள் நெஞ்சுறுதியோடு போராட்டக்களம் கண்டார்கள். ஒன்றிணைந்த போராட்டம் அரசு ஊழியர் ஆசிரியர்களின் நீண்ட நாள் கனவான மத்திய அரசுக்கு இணையாக ஊதியத்தை பெற வழி வகுத்தது. ஆளுநர் அடக்குமுறையை கைவிட்டு பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதன் பின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மத்திய அரசுக்கு இணையான ஊதியமும் போனகம் வழங்கியது.

## 2003 ஆம் ஆண்டு போராட்டம்

பல தியாகங்களையும் பெண்கள் தாலியைஅறுத்தும் பல அர்ப்பணிப்புகளையும் செய்து போராடி பெற்ற அரசு ஊழியர் ஆசிரியர்களின் உரிமைகளான சரண்டர் பறிப்பு , போனஸ் பறிப்பு ஜி.பி.எப் முன்பணம் 50% வீதமாக குறைப்பு ஓய்வூதிய பலன்கள் பத்திரமாக வழங்குதல் கமுடேசன் குறைப்பு, வேலை நியமன தடைச்சட்டம், ஆகிய உத்தரவுகளை அன்றைய முதல்வர் ஜெயலலிதா அம்மையார் அவர்கள் பிறப்பித்து அரசு ஊழியர் ஆசிரியர்களை நிர்கதியாக நிறுத்த முடிவெடுத்தார். அதோடு நிறுத்தவில்லை 01-04-2003 முதல் பணியில் சேர்ந்தவர்களுக்கு புதிய ஓய்வுத்திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.கொதித்து எழுந்த அரசு ஊழியர் ஆசிரியர்கள் ஜாக்டோ ஜியோ அமைப்பை உருவாக்கி அரசுக்கு எச்சரிக்கை விடுத்தும் அரசு கண்டுகொள்ளவில்லை ஜெயலலிதா அவர்கள் சட்டசபையில் கோபத்துடன் எச்சரிக்கையும் விடுத்தார் பறிக்கப்பட்ட உரிமைகளால் போராட்டம் 02-07-2003 எழுச்சியில் தொடங்கியது. எஸ்மா டெஸ்மா பாய்ந்தது. 176000 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள் தலைவர்கள் இரவோடு இரவாக கைது செய்யப்பட்டார்கள் வேலை நிறுத்தம் நீதிமன்றத்துக்கு சென்றது 6072 பேரை நிறுத்தி எஞ்சியோர் வேலைக்குச் செல்ல உத்தரவு வழங்கப்பட்டது.

டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களுக்கு சங்கம் மாதந்தோரும் ஊதியம் வழங்கியது. நீதிமன்ற விசாரணைக்கு பிறகு 999 பேரை நிறுத்தி மற்றவர்கள் தண்டனையோடு வேலைக்கு திரும்பினர் அச்சமயம் அதிமுக அரசு தேர்தலை சந்தித்தது தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் பகை முடிக்கும் பணியினை மேற்கொண்டது அரசு ஊழியர் ஆசிரியர்கள் மீது ஏவப்பட்ட அடக்கு முறை அந்த தேர்தலில் ஒரு இடம் கூட கிடைக்கவில்லை (0/40) அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பலத்தை உணர்ந்த இரும்பு மனுசி எனக்கூறப்பட்ட ஜெயலலிதா அவர்கள் பிப்ரவரி 2004 பறிக்கப்பட்ட உரிமைகள் அனைத்தையும் திரும்ப வழங்கினார். பறிக்கப்பட்ட உரிமைகள் யாரிடத்தில் இழந்தோமோ அவரிடமே நமது ஒன்றிணைந்த போராட்டத்தால் பெறப்பட்டது.

## 2016ஆம் ஆண்டு போராட்டம்

10-02-2016 அன்று வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வழியுறுத்தி வேலை நிறுத்தம் மிகசிறப்பாக வெற்றிகரமாக தொடங்கியது. 12-02-2016 மாவட்டத் தலைநகரங்களில் மறியலும், மறுநாளிலிருந்து வட்டத் தலைநகரங்களில் மறியலும் வெற்றிகரமாக நடைபெற்றது. அரசு கண்டுகொள்ளவில்லை காத்திருப்பு போராட்டம் தொடங்கியது. அரசு ஊழியர் சங்க

வரலாற்றிலேயே புதுமையான போராட்டம் இதுவரை இப்படி ஒரு போராட்டம் நடத்தப்படவில்லை 18-02-16 அன்று காலை முதல் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முன்பு அரசு அழைத்து பேசும் வரை இரவு பகல் பாராது 24மணி நேரமும் காத்திருப்பதென முடிவு செய்து தமிழகமெங்கும் தொடங்கப்பட்டது. கல்லில் நார் உரிக்க முடியுமா? வேலை நிறுத்தத்தை கைவிட்டு பணியாற்றுங்கள் என்று அன்றைய முன்னால் முதல்வர் மு.கருணாநிதி அறிக்கை வெளியிட்டார். ஆனால் மன உறுதியோடு போராட்ட களம் கண்டதால் அரசு பணிந்தது. 19-02-2016 சட்டப் பேரவையில் 110 விதியில் 12 அறிவிப்புகளை வெளியிட்டது கல்லில் நார் உரித்தோம், வெற்றி பெற்றோம் கல்லிலும் அரசு ஊழியர்கள் நினைத்தால் நார் உரிக்க முடியும் என்ற சரித்திரம் படைத்த போராட்டம் இது.

## 2017ம் ஆண்டு போராட்டம்

நீதிமன்ற தடையை மீறி நடத்தப்பட்ட மகத்தான போராட்டம், பகுத்தறிவு தந்தை பிறந்த ஈரோட்டு மண்ணில் போராடுபவர்கள் ஒன்றிணைந்து எடுத்த முடிவின்படி செப்டம்பர் 7ம் தேதி எழுச்சியாக வேலை நிறுத்தம் தொடங்கியது. போராட்டம் தொடங்கிய நாளன்றே நீதிமன்றம் நமது வேலை நிறுத்த போராடத்திற்கு தடை விதித்தது. ஆனால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் எந்தவிதமான அச்சமின்றி மிக எழுச்சியோடு போராட்டத்தில் ஈடுபட்டார்கள் செப்டம்பர் 11ம் தேதி நீதிமன்ற அவமதிப்பு என நீதிமன்றம் உத்தரவிட்டது. செப்டம்பர் 15ம் தேதி தலைவர்களில் சிலரை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டது. ஆனால் போராட்டத் தீ அணையவில்லை திக்கெட்டும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் எழுச்சியோடு போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். காவல் துறையின் அடக்குமுறை கட்டவிழுத்து விடப்பட்டது. லட்சக்கணக்கான ஆசியர்களும் அரசு ஊழியர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வேலை நிறுத்தத்தை நடத்திக் கொண்டே நீதிமன்ற அவமதிப்பு வழக்கை சந்திப்பது என முடிவெடுத்து ஜாக்டோ ஜியோ மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் காத்திருப்பு போராட்டம், காவல்துறை அடக்குமுறையை மீறி மிகச்சக்தியாக நடைபெற்றது. போராட்டக் கனல் வளர்ந்து கொண்டே இருந்தது. அரசு நிர்வாகம் முடங்கியது செப்டம்பர் 15ம் தேதி தடையை மீறி போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்து தலைமைச் செயலகம் ஊழியர்களும் கலந்து கொண்டார்கள், செப்டம்பர் 15ம் தேதி தலைவர்கள் போராட்டத்தில் இருந்து கொண்டே நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மிக கம்பீரமாக சந்தித்தனர்.

போராட்டத்தை திரும்ப பெற வேண்டும் என நீதிபதிகள் அச்சுறுத்தியபோதும், பொது குழுவை கூட்டியே முடிவெடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளுக்கு தீர்வு காண நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் தலைவர்கள் தெரிவித்தார்கள். போராட்டத்தை திரும்ப பெற்றால் கோரிக்கைகளுக்கு தீர்வு காண தலைமை செயலரை ஆஜராக உத்தரவிடுவோம் என நீதிபதிகள் கூறினார்கள். இது போராட்டத்திற்கு திருப்புமுனையாக அமைந்தது. போராட்டத்தை தற்காலிகமாக மட்டுமே ஒத்தி வைக்க முடியும் என்றும் தலைவர்கள் தெரிவித்தார்கள் நீதிபதிகள் இதனை ஏற்று 21ம் தேதி தலைமை செயலாளரை நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டது. இது வரலாற்று சிறப்புமிக்க பொன் எழுத்துக்கால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்வாகும்

தலைமைச் செயலாளரையே நீதிமன்றத்தில் நிறுத்தி ஊதிய மாற்றத்தை பெற்ற சரித்திரம் படைத்த பேரமைப்பு ஆகும். இது இந்தப் போராட்டத்தில் வரலாற்றின் புதிய அத்தியாயம் ஒன்று எழுதப்பட்ட நிகழ்வாகும்.

## 2019ஆம் ஆண்டு போராட்டம்

அரசு ஊழியர், ஆசிரியர் பேரமைப்பால் ஜாக்டோ ஜியோ நியாயமான 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 21-01-2019 முதல் கால வரையற்ற வேலை நிறுத்தத்தை எழுச்சியோடும், உணர்வுபூர்வமாகவும் நடத்தியது. ஊழியர்களின் எழுச்சியை கண்ட அரசு அழைத்து பேசி கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு பதிலாக கடுமையான அடக்குமுறையை ஏவியது. 1250க்கும் மேற்பட்டவர்கள் மீது பொய் வழக்கு போட்டு சிறையில் அடைத்தது. 2500க்கும் மேற்பட்டோர்களை தற்காலிக பணி நீக்கம் செய்தது. 1000ம் கணக்கான ஊழியர்களுக்கு 17பி குற்றச்சாட்டு வழங்கியது ஆனாலும் ஊழியர்கள் போராட்ட களத்திற்கு வந்து மாவட்டங்களில்

சக்தியோடும், எழுச்சியோடும் கலந்து கொண்டணர். இதனை தாங்கி கொள்ள முடியாத அரசு காவல் துறையை ஏவிவிட்டு கடுமையான தாக்குதல்களை அரசு ஊழியர்கள் மீது நடத்தியது. இப்போராட்டத்தில் அரசு ஊழியகள் ஆசிரியர்களின் கோரிக்கைகளை தவறாக சித்தரித்து பொது மக்களை நமக்கு எதிராக திசை திருப்பியது. இருப்பினும் போராட்டம் பல தாக்குதலுக்கு மத்தியில் மிக எழுச்சியாக உணர்வுபூர்வமாக நடைப்பெற்றது. இந்திய குடியரசு தினத்தில் அரசு மிக கேவலமாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களை கைது செய்து சிறையில் அடைத்தது. நெஞ்சில் மாறாத வடுவை தமிழக அரசு ஏற்படுத்தியது.

## 2021ம் ஆண்டு போராட்டம்

தொடர் மறியலும் சிறைநிரப்பும் போராட்டமும் பிப்ரவரி 2ம் தேதி தொடங்குவதற்கு முதல் நாள் இரண்டு வருடங்களாக திரும்பி பார்க்காத அரசு 5068 பேர் மீது போடப்பட்ட குற்ற குறிப்பாணைகளை ரத்து செய்து போராட்டத்தை உருகுலைப்பதற்கு தந்திரமான சூழ்ச்சியை கையாண்டது ஆனால் பிப்ரவரி 2ம் தேதி முதல் தொடர் மறியலும், சிறை நிரப்பும் போராட்டமும் மிக சிறப்பாக எழுச்சியோடு நடைபெற்றது. 1988,2003,2017,2019 போராட்டங்களைவிட மிக சிறப்பாக பெண்கள் இப்போராட்டக் களத்தில் தினமும் நெஞ்சுறுதியோடு கலந்து கொண்டார்கள். போராட்டம் என்ற ஒன்று வரும்போது தான் அரசு ஊழியரோ, ஆசிரியரோ ஒன்று காணாமல் போகிறார்கள் அல்லது கண்டெடுக்கப் படுகிறார்கள் இல்லையேல் வேறொருவர் ஆகிறார்கள் ஒரு கோஷம், மறியல் கைது, விடுதலை இவற்றின் மூலம் எதுவும் அறியாதவறாய் இருந்தவர்கள் எதிர்கால போருக்காக தன்னை தயார்படுத்தி கொள்கிறார்கள் கரப்பான் பூச்சுக்கு அஞ்சுபவர்கள் காவல் துறையின் பூட்ஸ் கால்களை ஒரு ஈசலை தட்டிவிடுவதுபோல் தட்டி விடுகிறார்கள். ஒருதுளி வியர்வைக்கு கைகுட்டயை தேடும் அவர்கள் போராட்டங்களில் லத்தி அடியில் உதிர்க்கும் ரத்தத்தை பண்ணீர் துளிகளை போல் உணர்ந்தார்கள். அடக்கு முறையை ஏவும் அரசாங்கத்தின் பார்வையிலிருந்து ஒலியும் முயல்போல் ஒதுங்கி கிடந்தவர்கள் சில போராட்ட அனுபவங்களுக்கு பிறகு சிங்கம் போல் சீறி எழுகிறார்கள். போராட்டங்கள்தான் தற்போதைய தலைமுறைக்கான இருப்பையும் எதிர்கால சந்ததிக்கான நெருப்பையும் அடைகாத்து வைக்கிறது எனவே போராட்டம் மட்டுமே உரிமைகளை மீட்டெடுப்பதற்கான வழி. உணர்வுகளை மதிப்பதற்கான மொழி என்பதற்கேற்ப இப்போராட்டக் கலத்தில் பெண்கள் சிங்கம் போன்று சீறிபாய்ந்து தனது உண்மையான உணர்ச்சிகளை தன் கோரிக்கைக்காக வெளிப்படுத்தினர். பெண்கள் கலந்து கொள்ளாத எந்தவொரு போராட்டமும் நிறைவு பெறாது என்பதற்கேற்ப பெண்களின் இப்போராட்டக் கனல் எட்டுத்திக்கும் தாவி பரவியது. உலகமே திருப்பி பார்த்த ஒரு வரலாற்று சிறப்புமிக்க போராட்டமாகும். ஆனால் அரசு உதாசினப்படுத்தியது அச்சமின்றி ஊண் உறக்கம்

### ரெய்டு...... ரெய்டு....... ரெய்டு......




"ரொம்ப அவசரமா வருதுங்க, எவ்வளவு?"
" 5 ரூபா கூடவே, எலக்ஷன் கார்டு, ஆதார்கார்டு, ரேஷன் கார்டு எதனா இருந்தா கொடுங்க".
"எதுக்கு அதெல்லாம்"
"எதிர்கட்சிக் காரங்க நடத்தற எல்லா தொழிற் கூடங்களிலும் ரெய்டு செஞ்சு, நாங்க அஞ்சு பைசா அதிகம் வச்சிருந்தாலும் ஆதாரம் கேக்கராங்க என்ன பண்றது?"

இன்றி நடத்திய இப்போராட்டத்தை அரசு திரும்பி பார்க்கவில்லை ஆனால் அகிலமே திரும்பி பார்த்தது. அழைத்து பேசாத முதல்வரை நேரில் சென்று சந்தித்து கோரிக்கைகளை முதல்வரிடம் பெருந்திரளாக கொடுப்பதென்று மாநில செயற்குழுவில் முடிவெடுக்கப்பட்டு 19-02-2021 அன்று சென்னையில் சங்கமமானோம்.

அரசு கண்டுகொள்ளாத சூழ்நிலையால் கோட்டையை நோக்கி பெருந்திரளாக சென்று கோரிக்கைகளை அரசுக்கு கொடுக்க சென்றோம். ஆனால் அரசோ காவல்துறையை கட்டவிழ்த்துவிட்டு கடும் தாக்குதலை அரசு ஊழியர்கள் மீது நடத்தியது. பெண்களுக்கு அரணாக இருக்க வேண்டிய காவல் துறை தனது லத்தியால் பெண்களை தாக்கியது. காவல்துறையின் தாக்குதலால் பல பெண்களும் ஆண் தோழர்களும் கடுமையான பாதிப்புக்குள்ளானார்கள் இந்த தாக்குதல் ஹிட்லர் ஆட்சியைவிட மோசமானதாக இருந்தது. ஆனாலும் தனது கோரிக்கை ஒன்றே பிரதானமென்றும் தனது வருங்கால வாழ்வாதார உரிமைக்காகவும் கோரிக்கைகளுக்காகவும் பல தடைகளையும் அடக்குமுறைகளையும் தாண்டி பெண்களும் கோட்டை கதவை முதன் முதலாக சேர்ந்து தட்டிய சரித்திரம் படைத்த வரலாற்று சிறப்புமிக்க உலகமே திரும்பி பார்க்க வைத்த 2021 ஆண்டு போராட்டம் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க போராட்ட வரலாற்றின் சிறப்புமிக்க ஒருமைல்கல் ஆகும்.

மேற்கண்ட போராட்ட காலத்தில் தலைவர்கள் முன்னணி ஊழியர்கள் மகளீர் கைது செய்யப்பட்டனர். சிறையில் அடைக்கப்பட்டனர் ஊதிய வெட்டு, பதவி இறக்கம், பணி நீக்கம் இடமாறுதல்கள் என பல வகையில் பழிவாங்கப்பட்டனர். இவைகள் எல்லாம் போராட்டக் களத்தில் ஏற்பட்ட வீர தழும்புகளாக மாறி இன்றும் நினைவில் இருக்கின்றன.

அவர்களின் உறுதிமிக்க குணம் தியாகங்கள் மூலமாகத்தான் நாம் பல சலுகைகளை பெற்று நடுத்தர அமைப்புகளிளேயே உயர்வான நிலையில் இன்றும் உள்ளோம். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் நடத்திய சமரசமற்ற போராட்டங்களின் மூலமே தமிழகத்தில் ஊதியமாற்றமாக இருந்தாலும் சரி எந்த ஒரு கோரிக்கையாக இருந்தாலும் சரி பெறப்பட்டன. மாறாக ஆட்சியாளர்கள் கருணையினாலும் காருண்ணியத்தாலும் அல்ல பெற்ற உரிமை ஒவ்வொன்றிலும் நம் வியர்வை, ரத்தம், உழைப்பு, பல உயிர்தியாகம், பலரின் அர்ப்பணிப்பு உள்ளது என்பதை உணர்த்த வேண்டிய கடமை நம்முள் உள்ளது. பல போராட்டங்களை நடத்தியும் திரும்பி பார்க்காத அரசை ..........

துணிவு என்பது கண்முடித்தனமாக

அபாயத்தில், இருந்து மீள்வதுமட்டுமல்ல அதனை

எதிர் நோக்கி வெற்றி வெறுவதும் தான்

என்ற ஜூன்பால்விக்டர் அவர்களின் பொன் மொழிக் கேற்ப வரும் ஏப்ரல் 6ம் தேதி நம் போராட்டக் கனவோடும், துணிவோடும் வீரத்தோடும், மன உறுதியோடும், போராட்டகள வலியோடும் கயமையை வேரறுக்கும் கடமையை மீண்டும் ஆற்றுவோம்.

- சி.பரமேஸ்வரி

## கண்ணீர் அஞ்சலி



தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் ஒன்றுபட்ட திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டக்கிளை முன்னாள் செயலாளரும், மருத்துவத் துறையில் பணியாற்றி ஒய்வுபெற்ற பின்னர் தமிழ்நாடுஅரசு அனைத்துத்துறை ஒய்வூதியர் சங்கத்தின் பெரம்பலூர் மாவட்டச் செயலாளருமான தோழர் ஆர்.முருகேசன் உடல் நலக்குறைவால் உயிரிழந்தார் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார்க்கும், தோழர்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

# அரசு ஊழியர்கள் போராட்டம்

## நேற்று இன்று நாளை

"**தொ**ழிலாளர் இயக்கம் நம் நாட்டைச் சூழ்ந்துள்ள இருளைப் போக்க வல்ல ஒளியாகும்."

- திரு.வி. க.

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள் நாடு விடுதலை பெற்ற 1947ஆம் ஆண்டிலிருந்தே தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காவும், உரிமைகளுக்காகவும் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.

### வரலாற்றில் பதிந்த போராட்டங்கள்

தங்கள் உரிமைகள் பாதிக்கிறபோதெல்லாம் அரசு ஊழியர்கள் அதை எதிர்த்து தீவிரமான போராட்டங்களை 1988, 2002, 2003, 2011, 2016, 2017, 2019, 2021ஆம் ஆண்டுகளில் தீரத்தோடு போராடியுள்ளார்கள்.

அதிகமான தாக்கங்களை ஏற்படுத்திய போராட்டங்களாக 2003 இல் நடைபெற்ற போராட்டமும், சமீபத்தில் அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக 2021, பிப்ரவரி-19 அன்று நடைபெற்ற பெருந்திரள் முறையீடு-சென்னை கோட்டை முற்றுகை போராட்டத்தையும் குறிப்பிடலாம்.

### சீர்திருத்தத்தின் பெயரால் சீரழிவுகள்

2000 ஆண்டுகளின் துவக்கத்தில் மத்திய, மாநில அரசுகள் புதிய பொருளாதார-தொழிற்கொள்கைகளை தீவிரமாக அமல்படுத்தத் தொடங்கிய காலகட்டம்.

2001, மே மாதம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதா புதிய பொருளாதார தொழிற்கொள்கைகளை தீவிரமாக அமல்படுத்தியும், சீர்திருத்தம் என்ற பெயரால் உலக வங்கி, IMF போன்ற சர்வதேச அமைப்புகளின் கட்டளைகளை நிறைவேற்றுவதில் தனக்கு நிகர் யாருமில்லை என்று காட்டிக்கொள்வதில் முனைப்புடன் செயல்பட்டார் என்றால் அது மிகையல்ல.

சிக்கன நடவடிக்கை, அரசு செலவினங்களை குறைப்பது, உழைப்பாளிகளின் உரிமை மறுப்பது என்பதில் தன்னை சர்வாதிகாரியாகவே பாவித்துக்கொண்ட செல்வி.ஜெயலலிதா,

முதலில்.....

2001ஆம் ஆண்டு போக்குவரத்து தொழிலாளர்களுக்கான போனஸை குறைத்து அறிவித்தார். இதை எதிர்த்து போக்குவரத்து தொழிலாளர்கள் 17 நாட்கள் வேலைநிறுத்தம் செய்தனர். காவல்துறை மூலம் அப்போராட்டம் கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டது.

### தொடர்ந்த சீரழிவு நடவடிக்கைகள்

இதே காலகட்டத்தில் தான்.....

- 13,000 மக்கள் நலப்பணியாளர்கள் நிரந்தர பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.
- உலக வங்கி உத்திரவுப்படி 10,000 சாலைப்பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள்.
- 1000 காதிவாரிய ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டார்கள்.
- அரசுத்துறைகளில் 30% ஆட்குறைப்பு செய்திடும்வகையில் சாமிநாதன் தலைமையில் குழு அமைத்து செயல்படுத்தப்பட்டது.
- அரசு ஊழியர்-ஆசிரியர் குடும்ப அட்டைகளுக்கு பி முத்திரை குத்தியது.
- கோவில்கள், பொது இடங்களில் கோழி,ஆடு பலியிட தடை,
- மதமாற்ற தடை சட்டம்

போன்ற கொடூர நடவடிக்கைகள் எடுத்ததோடு....

### அரசு ஊழியர்கள் உரிமை பறிப்பு

அரசு ஊழியர்கள் போராடி பெற்ற உரிமைகளான ......

• பண்டிகை முன்பணம் மறுப்பு

• சரண் விடுப்பு உரிமை ரத்து

• போனஸ் மறுப்பு

• வேலை நியமன தடை சட்டம்

அதற்குப் பிறகு ஓய்வூதியம் தொடர்பான 6 அரசாணைகள் வெளியிட்டு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியது அன்றைய செல்வி.ஜெயலலிதா தலைமையிலான அதிமுக அரசு.

• முழு ஓய்வூதியம் பெற 30 ஆண்டு பணிக்காலம் என்பது 33 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது

• ஓய்வுபெறும்போது வழங்கக்கூடிய பணிக்கொடை, தொகுப்பு ஓய்வூதியம், விடுப்பு சம்பளம் ஆகியவற்றில் 50% தான் ரொக்கமாக வழங்கப்படும் மீதி 50% பத்திரமாக (BOND) தரப்படும் என பழிவாங்கியது தமிழக அரசு.

இத்தகைய அராஜக நடவடிக்கைகளை எதிர்த்துதான் 02.07.2003 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம் தொடங்கியது.

ஆனால் அதற்கு முன்பே 30.06.2003 அன்று இரவே அரசு ஊழியர் ஆசிரியர் சங்க தலைவர்களை வீடு புகுந்து கைது செய்து அவமானப்படுத்தியது தமிழக அரசு .பெண் ஊழியர்களை மிரட்டி கைது செய்ததோடு மட்டுமல்ல அவர்கள் மீது விபச்சார வழக்கு போடுவதாகவும் மிரட்டியது.

ஆத்திரம் தணியாத அன்றைய தமிழக முதல்வர் " டெஸ்மா" சட்டத்தை பயன்படுத்தி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட 1,76,000க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்-ஆசிரியர்களை பணிநீக்கம் செய்தார்.

போராட்டம் முடிவுக்கு வந்த பிறகும் யாரையும் பணிக்கு சேரவிடாமல் வீதியில் நிறுத்தி வேடிக்கை பார்த்தது தமிழக அரசு.

## கை கொடுத்த தோழனாக

இந்திய தொழிற்சங்க மையத்தின் அகில இந்திய துணைத்தலைவர் தோழர் டி.கே.ரங்கராஜன் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து 6,072 பேர் தவிர அனைவரையும் பணியில் சேர்க்க ஆணை பெற்றுத் தந்தார்.

6,072 பேர் மீது விசாரணை நடைபெற்று 999 பேர் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டார்கள்.

அதன் பிறகு நாடாளுமன்ற தேர்தலை ஒட்டி 999 பேரும் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டனர்.

இந்த காலக்கட்டத்தில் 150 க்கும் மேற்பட்ட அரச ஊழியர்-ஆசிரியர்கள் இறந்துபோனார்கள்.

லட்சக்கணக்கான அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் ஒரே அரசாணையில் பணிநீக்கம் செய்யப்பட்டது அப்பட்டமான சர்வாதிகாரப் போக்கு என்று சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) வரை கொண்டுசெல்லப்பட்டு, அன்றைக்கு இந்திய பிரதமராக இருந்த அடல்பிகாரி வாஜ்பயி அவர்கள் பதில் சொல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டது.

## புதிய வரலாறு

வரலாறு ஓரிடத்தில் நின்றுபோவதில்லை. அதன் சக்கரங்களை உழைப்பாளி வர்க்கம் நகர்த்திக்கொண்டேயிருக்கும். அது முன்னேற்றத்தை நோக்கி சென்றுகொண்டே இருக்கும் என்பதைப்போலத்தான்,

சமீபத்தில் நடைபெற்ற 2021, பிப்ரவரி-19 பெருந்திரள் முறையீடு- சென்னை கோட்டை முற்றுகை போராட்டம்.

• புதிய பென்சன் திட்டம் ரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டம் அனைவருக்கும் அமல்படுத்த வேண்டும்

• இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை பறிக்கிற அரசாணை எண்:56 ஐ ரத்து செய்து, அதற்காக அமைக்கப்பட்ட ஆதிசேஷய்யா குழுவை கலைக்க வேண்டும்

• கொத்தடிமை முறையில் உள்ள சத்துணவு, அங்கன்வாடி உள்ளிட்ட அனைவருக்கும் முறையான காலமுறை ஊதியம் வழங்கிட வேண்டும்

போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி ஆண்டுக்கணக்கில் தொடர்ச்சியாக அரசு ஊழியர்கள் போராடி வருகிறார்கள்.

## நீதிமன்றம் சொன்னபிறகும்

புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்திட திருமதி.சாந்தா ஷீலா நாயர் IAS, அடுத்து திரு.ஸ்ரீதர் IAS தலைமையில் அமைக்கப்பட்ட இரண்டு குழுக்களின் அறிக்கையும் வெளியிடப்படவேயில்லை. அறிக்கைகளை வழங்கிட வேண்டும் என்று மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளை அறிவுறுத்தியும் தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## புதிய வழியை தேடிய மாநில பேரவை

2020, டிசம்பர்-20 அன்று தருமபுரியில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாண்புமிகு தமிழக முதல்வர் அரசு ஊழியர் சங்கத் தலைவர்களை அழைத்துப்பேசி கோரிக்கைகளை நிறைவேண்டும் என

• 2021, ஜனவரி-05 முதல் ஊழியர் சந்திப்பு இயக்கம்

• 2021, ஜனவரி-19,20, இல் 7 மண்டலங்களில் போராட்ட ஆயத்த மாநாடுகள்

• 2021, ஜனவரி-27 இல் மதுரையில் எதிர்கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாடு

• 2021, பிப்ரவர் -02 முதல் தொடர் மறியல் சிறை நிரப்பும் போராட்டம்

என்ற முடிவின் அடிப்படையில் போராட்டங்கள் தொடர்ந்தது.

ஆனால், தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி எதையும் பொருட்படுத்தாதது மட்டுமல்ல, நம்மை அலட்சியப்படுத்தும் விதமாகவும் நடந்துகொண்டார்.

நம்மை சந்திக்காத முதல்வரை நாம் சந்திப்பது என்று போராட்ட வடிவத்தை மாற்றி சென்னையில் பிப்ரவரி-19 அன்று பெருந்திள் முறையீடு செய்வது என்று நாள் குறிக்கப்பட்டது.

## போராட்டத்தின் புதிய திசைவழி

2021, பிப்ரவரி-19 சென்னை சேப்பாக்கம் போராட்ட திடலுக்கு தமிழகம் முழுவதிலிருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான தோழர்கள் பிற்பகல் 01.00 மணிவரை பொறுமை காத்தனர்.

இறுதியாக.....

மாநில நிர்வாகிகள் தமிழக அரசுக்கு கெடு விதித்தனர்.....

"அடுத்த 40 நிமிடங்களுக்குள்ளாக தமிழக முதல்வர் அழைத்துப் பேசவேண்டும்.....

இல்லையென்றால்.....

நாங்கள் கோட்டை முற்றுகையிடுவோம்"

என்று அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

தமிழக அரசு கடைசி வாய்ப்பையும் அலட்சியப்படுத்தியது.

"புறப்படுங்கள் தோழர்களே" - என்று மாநில நிர்வாகிகள் ஊழியர்களை அழைத்துக்கொண்டு தலைமைச்செயலகம் நோக்கி புறப்பட்டனர்.

## காவல்துறையின் கோரமுகம்

தமிழக அரசின் சென்னை மாநகர காவல்துறை தன் கோர முகத்தை காட்ட துவங்கியது. அமைதியாக பேரணியாக சென்றவர்களை இரும்பு தடுப்புகள் கொண்டு தடுத்தது. மாடு கட்டும் கயிறு கொண்டு குறுக்கே பிடித்து தடுத்து நிறுத்தியது.

ஊழியர்கள் தடைகளை தாண்டி முன்னேறிக் கொண்டிருந்தனர்.

### அதைத் தேடித்தான்....

அதைத் தேடித்தான்
வேகமாக நடந்தோம்
ஓடினோம்.....

எங்களை தடுக்கும் உறுதி
இரும்பு தடுப்புகளுக்கில்லை

குறுக்கே மறிக்க
கயிறுகள் போதவில்லை

எங்கள் கை,கால்களை
ஒடித்தே ஒடிந்துபோனது
லத்திகள்

காக்கியையும்
கறுப்பு பூனையையும் தாண்டி.....

அதைத் தேடித்தான்
வேகமாக நடந்தோம்
ஓடினோம்......

அதோ
எங்களுக்கு முன்பே
எங்கள் உயிர்
கோட்டையின் கதவுகளை
உலுக்கிக்கொண்டு.....

அதைத் தேடித்தான்
வேகமாக நடந்தோம்
ஓடினோம் ......

- ஆர்.நடராஜன்

காவல்துறை தடியடியில் இறங்கியது. கைகளால் பிடித்து கீழே தள்ளினார்கள். மாநில நிர்வாகிகள் உட்பட பலரையும் நெஞ்சில் இடித்து தள்ளினார்கள். பெண்கள் உட்பட பலரின் கை, கால்கள் உடைக்கப்பட்டன. படுகாயங்களை ஏற்படுத்தியதோடு அரசு ஊழியர்கள் என்றுகூட பார்க்காமல் தரக்குறைவான வார்த்தைகளை காவல்துறையினர் வசை மாறி பேசினர்.

ஆனால், இத்தனையும் மீறி கை, கால் உடைந்து அடிபட்டு, உதைபட்டு, ரத்தம் சிந்தி கொண்டே தலைமைச்செயலகத்தின் முன் திரண்டு முதலமைச்சரின் காதுகளுக்கு எட்டும் வகையில் கோரிக்கை முழக்கமிட்டு தங்கள் கடமையின் ஒரு பகுதியை அரசு ஊழியர்கள் நிறைவேற்றினார்கள்.

## இறுதி வெற்றி நமதே

சில போராட்டங்களின் பலன்கள் உடனடியாகத் தெரியும். சில போராட்டங்கள் தீவிரமான தாக்கத்தை ஏற்படுத்தி அடுத்து வெற்றியை தரும்.

இந்தப் போராட்டம் இன்றைய ஆட்சியாளர்களுக்கு மட்டுமல்ல. அடுத்து ஆட்சி அமைப்பவர்களின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும். கோரிக்கைகள் வெற்றிபெற துணை நிற்கும்.

## கொஞ்சமிருக்கு....மிச்சமிருக்கு.....

நம் கோரிக்கைகளை உதாசீனப்படுத்தி, நம்மோடு பேச மறுத்து, நம்மை அலட்சியப்படுத்தியவர்களுக்கு மை இட்ட இடது சுட்டு விரல் புரட்சியின் மூலம் மிச்சமிருக்கும் கடமையை முடிக்க வேண்டியுள்ளது.

விழித்திருப்போம்.....

2021, ஏப்ரல்-06 ஐ எதிர்நோக்கி.....

வென்றதில்லை! வென்றதில்லை!

அடக்குமுறைகள் வென்றதில்லை.

தோற்றதில்லை! தோற்றதில்லை!

தொழிற்சங்கம் தோற்றதில்லை.

இறுதி வெற்றி - நமதே.

**-ஆர்.நடராஜன்,** கிருட்டினகிரி.

## வாராயோ எந்தன் தோழா

(வாராயோ வெண்ணிலாவே..திரை மெட்டு)

வாராயோ எந்தன் தோழா
வாக்களிக்க நீ வாராய்...(வாராயோ)

அன்றாட சிலிண்டர் விலையும்
பெட்ரோல் டீசலும் உயரும்
எந்நாளும் பதற்றம் தொற்றும்
இந்நாளில் நினைவில் நிற்கும்...(வாராயோ)

நீதிக்குழுவும் இன்று இல்லை
புலனாய்வுத் துறையும் தொல்லை
நீதி மன்றங்கள் யாவும்
அரசின் கைப்பாவை கண்டோம்...(வாராயோ)

மத்திய ஆட்சியால் மக்கள்
வதைபடும் காட்சிகள் சாட்சி
ஒரு பானை சோற்றுக்கு பதமாய்
உழவர் தொடர்போர் நிஜமாய்
...(வாராயோ)

போராடிப் பெற்ற உரிமை
வேருடன் பறிப்பார் எடப்பாடி
போருடன் வீதியில் நின்றால்
தடியுடன் போலீஸ் அடிப்பார்
...(வாராயோ)

அடிமை ஆட்சி நடத்தும்
ஈபிஎஸ் ஓபிஎஸ் மீண்டும்
ஆட்சியில் அமர்ந்திட லாமோ
ஆட்சி மாற்றம் தந்திடுவோமே..(வாராயோ)

மண்ணும் காற்றும் நீரும்
நஞ்சாய் மாறல் தகுமோ
நெஞ்சுரத்துடன் போரிட்டால்
சுட்டுத் தள்ளிடும் அரசே..(வாராயோ)

அரசின் தூதுவர் ஊழியர்
சமுதாயச் சிற்பிகள் ஆசிரியர்
இவர்களை ஐந்தாண்டுகளாய்
வஞ்சித்த நிஜம் நினைவாகும்..(வாராயோ)

பெரணமல்லூர் சேகரன்

# போராட்டங்களும் அரசின் பாராமுகமும்

தமிழக அரசின் நிர்வாகத்துறை, அரசின் முதுகெலும்பு, அனைத்து துறைகளுக்கும் தாய்த்துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மாவட்டங்களின் தலைமைச் செயலகங்கள், சட்டமும் ஒழுங்கும் பராமரிப்பவர்கள், மக்களுக்கான அரசின் நலத்திட்டங்களை கடைக்கோடி கிராமம் வரை கொண்டு சேர்ப்பதில் அயராது பாடுபடுபவர்கள் உள்ளிட்ட பல்வேறான பாராட்டுரைகள் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பல்வேறு காலகட்டங்களில் முதலமைச்சர்கள், அமைச்சர் பெருமக்கள், வருவாய்த்துறையின் உயர் அலுவலர்கள் ஆகியோரால் வழங்கப்பட்டுள்ளன. எல்லாம் வெறும் பேச்சளவில்தான். செயல்பாட்டில் இல்லை என்பது தான் வருத்தத்திற்குரியது.

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலான கோரிக்கை 'வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம்" வழங்கப்பட வேண்டும் என்பது. வருவாய்த்துறை அலுவலர்கள் இரவு பகல் பாராமல், விடுமுறை நாள் பாராமல், மழை, புயல், வெள்ளம் பாராமல், பல்வேறு பணிகளை பார்த்து வருவதால் மிகுந்த பொருட் செலவும், மனஅழுத்தமும் பெறுகின்றனர். குடும்பத்தை மறந்து, உடல்நிலை பாதிப்புகளுடன் பணிகள் பார்க்கின்றனர். எனவே அனைத்து நிலை வருவாய்த்துறை அலுவலர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட ஊதியம், 30% தனி ஊதியம் வழங்க வேண்டும் என்பது பிரதானமான கோரிக்கையாக பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. மேலும் பல்வேறு துறைகளில் நிர்வாகம் செய்யும் பணியிடங்களில் துணை ஆட்சியர் நிலையில் வருவாய்த்துறை அலுவலர்களே நியமிக்கப்பட்டு வந்தனர். கலால், குடிமைப்பொருள், ஆவின், மேலாண்மை பயிற்சி மையங்கள், மாநகராட்சி, மருத்துவத்துறை உள்ளிட்ட துறைகளில் துணை ஆட்சியர் நிலையில் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் வருவாய்த்துறையின் பெயர் 'வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டுவிட்ட நிலையில் வருவாய்த்துறைக்கான இயல்பான பணிகளை பின்னுக்குத் தள்ளி பேரிடர் மேலாண்மை பணிகளில் நிவாரணப் பணிகளை கூடுதலாக பார்க்க வேண்டிய நிலையில் உள்ளனர். எனவே மாவட்டந்தோறும் பேரிடர் மேலாண்மை பணிகளை ஒருங்கிணைப்பதற்காக துணை ஆட்சியர் நிலையில் பணியிடங்கள் வழங்க வேண்டும் என்பதும் வருடத்தின் எல்லா நாட்களிலும் தேர்தல் பணிகள் தொடர்வதால் ஆறு சட்டமன்ற தொகுதிகள் உள்ள மாவட்டங்களில் தேர்தலுக்கென துணை ஆட்சியர் பணியிடங்கள் நிரந்தரமாக வழங்கப்பட வேண்டும் என்பதும் கோரிக்கைகளாக உள்ளன.

கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணிவரன்முறை உத்திரவினை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே வழங்கினால் அரசிடம் தேங்கியிருக்கும் நிலை ஏற்படாது என்பதாலும் ஊழியர்களும் பணிவரன்முறை செய்யப்பட்டு அடுத்தடுத்த பதவி உயர்விற்கு செல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதாலும் இக்கோரிக்கையும் பல ஆண்டுகளாக வைத்து போராடிவரும் நிலையில், அந்தந்த துறைத் தலைவர்களே பணிவரன்முறை

## கண்டிப்பா போடுங்க ஓட்டு!



"அய்யா இந்த முறை அரசு ஊழியர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பெண்கள் எல்லாரும் பணம், பரிசுப் பொருட்களுக்கு விலை போகாமல் கண்டிப்பா வாக்களிக்கணும்ங்க....."

"நாங்க யாருக்கு ஓட்டு போடணும்ங்கரதை விட யாருக்கு எதிரா ஓட்டுபோடணும்ங்கரதுல தெளிவா இருக்கோம் நீங்க தைரியமா போங்க......"

செய்யலாம் என அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. இது கோரிக்கையில் சற்று முன்னேற்றமே.

கொரானா பணிகளில் ஈடுபட்டு நோய்த் தொற்று ஏற்பட்டு இறந்தால் ரூ.50 இலட்சம் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்த அறிவிப்பின் படி திருச்சி மாவட்டத்தை சேர்ந்த திரு.குமார் என்ற கிராம நிர்வாக அலுவலருக்கு மட்டுமே வழங்கப்பட்ட நிலையில் அதற்குப் பின்னாளில் வருவாய்த்துறை அலுவலர்கள் கொரானா தொற்று ஏற்பட்டு இறந்ததற்கும், கொரானா தடுப்பு பணியில் ஈடுபட்டபோது விபத்தில் இறந்தவர்களுக்கும் நிவாரண உதவிகள் ஏதும் வழங்கப்படாத நிலையில், போராட்டங்கள் நடத்திய பின் ரூ.25 இலட்சமாக வழங்கப்பட்டு பின் ரூ.5 இலட்சமாக சுருங்கிப் போன அவலநிலையும் ஏற்பட்டது.

கொரானா நோய்த் தொற்று ஏற்பட்டு சிகிச்சை பெறும் அரசு ஊழியருக்கு ரூ.2 இலட்சம் வழங்கப்படும் என்ற முதல்வரின் அறிவிப்பு காற்றில் கரைந்தே போனது.

கொரானா பரவிவரும் காலத்தில் பவானிசாகர் அடிப்படை பயிற்சி நிலையமும், ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சி நிலையமும் தொடர்ந்து மூடப்பட்டுள்ளதால், மாவட்டங்களிலேயே அடிப்படைப்பயிற்சியும், நில அளவைப் பயிற்சியும் வழங்கவேண்டும் என்ற கோரிக்கைக் கும், மாவட்டங்களில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர், மசால்சி, பதிவறை எழுத்தர் பணியிடங்களை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கும் மட்டுமே சாதகமான அரசாணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனாலும் வருவாய்த்துறையில் காலியாக உள்ள ஆயிரக்கணக்கான பணியிடங்கள் நிரப்ப எந்த உத்திரவும் பிறப்பிக்கபடவில்லை.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத் தின் நீண்ட போராட்ட வரலாற்றில் பல ஆண்டு களுக்கு பிறகு 10 நாட்கள் தொடர் வேலை நிறுத்தம் என்பது சக்தியாக நடத்தப்பட்டது. பணிக்கு வந்து சில மாதங்களே ஆன இளந்தோழர்களும் பங்கேற்றனர் என்பதும், தேர்தல் பணிகள் ஆரம்பித்து நடைபெற்று வந்த நேரத்தில் இந்த காலவரையற்ற வேலைநிறுத்தம் அனைத்து மாவட்டங்களிலும் எழுச்சியாகவும், உணர்வுபூர்வமாகவும் நாளுக்கு நாள் மாவட்டங்களில் பங்கேற்பு கூடிக்கொண்டே போனது என்பதும் பிரமிப்புடன் பார்க்க வேண்டிய விசயம்.

சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிப்பு வெளியாகும் என்ற நம்பிக்கை பொய்த்துப் போனது. போராட்டம் அறிவித்த பின்பும், போராட்டம் நடைபெற்று வரும் போதும் வருவாய்த்துறை உயர்அலுவலர்களால் மட்டுமே கோரிக்கைகளுக்கான கோப்புகள் நகர்வு என்பது நடந்தது. மூன்றுமுறை தமிழக முதல்வரை சந்தித்தும், ஐந்து முறை வருவாய்த்துறை அமைச்சரோடு பேச்சுவார்த்தை நடத்தியும் கோரிக்கைகளின்பால் எவ்விதமான முன்னேற்றமும் இல்லை என்ற கோபம் ஊழியர்களிடம் இருந்தது. இதுவே இப்போராட்டத்தினை மேலும் உறுதியாக நடத்த காரணமாக இருந்தது.

வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்க வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய்த்துறை கூடுதல் தலைமை செயலாளர் பரிந்துரைத்த நிலையில் தமிழ்நாட்டின் ஆலோசகரும் முன்னாள் தலைமைச் செயலாளருமான திரு.சண்முகம், இ.ஆ.ப அவர்களின் தலையீட்டின் காரணமாகவே இக்கோப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமான தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும், தேர்தலை சிரமங்களுடன் நடத்தும், பல்வேறு பணிகளை ஒருங்கிணைக்கும் வருவாய்த்துறை ஊழியர்களின் நலன் சார்ந்த கோரிக்கைகளின் மீது இந்த அரசாங்கத்திற்கு அக்கறையில்லை. அழைத்துப் பேசி தீர்வு காண முயற்சி எதுவும் நடத்தவில்லை என்ற நிலையில் போராட்டத்தை தொடர்வது என மத்திய செயற்குழுவும் ஒப்புதல் அளித்தது. ஆனால் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நிலையில் தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறைக்கு வந்துவிட்ட ஒரே காரணத்தால் 10 நாள் நடைபெற்ற காலவரையற்ற வேலைநிறுத்தத்தை வேறு வழியின்றி ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனவே பகை முடிக்கும் பணி முடிப்போம் என்ற ஆக்ரோசத்தோடு எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் நம்மைப் புறக்கணித்த ஆட்சியை நாமும் புறக்கணிப்போம். நாளைய தமிழகம் நம்முடையதாக மலரட்டும் அதற்கான அனைத்து யுக்திகளையும் கையிலெடுப்போம்.

ஒன்றுபடுவோம் - போராடுவோம் - முன்னேறுவோம்

- **இரா.மங்களபாண்டியன்**

# மீண்டும் நாம் தொடர்வோமா?

**மை** டியர் காம்ரேட்ஸ்!

இது தேர்தல் நேரம் என்பதால் மட்டுமல்ல பொதுவாகவே அவ்வப்போது எனக்குள் எழுந்து விழும் கேள்வி "இந்த தேர்தல் முறையும், வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படும் விதமும் சரிதானா?" என்பதுதான். இந்தியா சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகளுக்கும் மேலாக ஆகிவிட்ட நிலையில் நமது நாட்டில் இன்னமும் பசியும், பட்டினியும், ஏழ்மையும் வறுமையும் இருக்கிறது என்றால் ஜனநாயகம் என்ற கட்டமைப்பு சரியாக வளர்த்தெடுக்கப்படவில்லையோ என்ற ஐயப்பாடுதான் எழுகிறது. ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆட்சியாளர்களும் கட்சிக்காரர்களும் மக்களைத் தேடி வருவதும் அதன்பிறகு மக்களை மறந்து விடுவதும், மக்களுக்கான திட்டங்கள் சட்டங்கள் எல்லாம் ஓட்டு வங்கியைக் குறிவைத்தே நடப்பதையும், இலவசங்களும், கடன் தள்ளுபடிகளும் மக்களின் நிரந்தரத் துயரை போக்கமுடியாது என்று தெரிந்தும் ஓட்டுகள் வாங்குவதற்காக மக்களின் வரிப்பணம் வீணாக்கப்படுவதும், நாட்டின் வளர்ச்சி பாதிக்கப்படுவதும் மிகப்பெரிய கேள்வியை எழுப்புவதாக உள்ளது.

இன்னமும் சாலையோரங்களில் பிளாட்பாரங்களில் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களுக்கான விடியலை இந்த ஜனநாயக அமைப்பு ஏற்படுத்தவில்லை என்றால், அது இங்கு வாழும் மக்களின் வறுமையைப் போக்கவில்லை என்றால் ஜனநாயகத்தைக் காப்பவர்களாக தங்களைக் கூறிக்கொள்பவர்கள் அதன் சாரத்தை விட்டுவிட்டு சக்கையை மட்டும் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். எல்லோருக்கும் உணவு வேண்டும் என்றால் எல்லோருக்கும் வேலை வாய்ப்பு வேண்டும். எல்லோருக்கும் வேலை வாய்ப்பு வழங்க நாட்டில் தொழில் வளம் வேண்டும். தொழிற்சாலைகளும் விவசாயமும் வேலை வாய்ப்புகளை கொண்டு வந்து சேர்த்தால்தான் நாட்டின் பொருளாதாரம் உயரும். நாடும் வளர்ச்சி பெறும். இந்தியாவிலுள்ள அரசியல்வாதிகள் யாரேனும் அடுத்த வேளை சோற்றுக்கு உணவில்லாமல் தவிக்கும் ஏழைகளுக்காக வருத்தப்பட்டு திறந்த மனதுடன் திட்டம் தீட்டி வறுமையையும் ஏழ்மையையும் விரட்டியடிக்க வழிகோலியிருக்கிறார்களா என்றால், அடுத்த வேளை உணவிற்காக கையேந்தி நிற்கும் இத்தனை பெரிய கூட்டத்தைப் பார்த்து 'இல்லை' என்றுதான்



பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த நாட்டில் ஒரு பிரிவு மக்கள் எப்போதும் ஒட்டிய வயிறோடும், உலர்ந்த நாவோடும் தான் வாழ்ந்து மடியப் போகிறார்களா? அவர்கள் வாழ்வில் சூன்யத்தைத் தாண்டி எதுவுமேயில்லையா? 70 ஆண்டுகளுக்குப் பிறகும் அதைப்பற்றி இங்கே சிந்திக்கவோ கவலைப்படவோ யாருமில்லையா?

ஒரு பெரிய பணக்கார வீட்டுப்பையன் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் அவனை பள்ளியிலிருந்து வீட்டிற்கு அழைத்துச் செல்லவந்த அவனுடைய அப்பா, அந்த பதின்ம சிறுவனிடம் "எதிர்காலத்தில் நீ என்னவாகப் போகிறாய் ?" என்று கேட்டபோது, அந்த சிறுவன் தன் பையிலிருந்த கற்றை காகிதங்களை எடுத்துக்காட்டி 'அப்பா இதெல்லாம் நான் எழுதிய கவிதைகள். நான் எதிர்காலத்தில் கவிஞனாகப் போகிறேன்.' என்றான். பயந்து போன அவன் தந்தை அடுத்த நாளிலிருந்து அவனை பள்ளிக்கு அனுப்பவில்லை.

"இதோபார் மகனே, ஊர் முழுக்க விதம் விதமாக ஆலைகளைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கிறேன். பணம் மழைபோல் கொட்டுகிறது. ஏழு தலைமுறைக்கு தேவையான சொத்து சேர்த்தாகிவிட்டது. நீ எதற்கு அனாவசியமாக கவிதை, கிவிதை என்று அலைய வேண்டும்? வா என்னோடு." என்று அவனை அவர் நடத்தும் தொழிற்சாலைகளில் ஒன்றிற்கு அழைத்துப் போய் அமர்த்தினார். "அப்பா இதெல்லாம் எனக்குத் தெரியாது" என்று பேசிய அவனிடம் அவர் கூறினார், "தம்பி, நீ எதுவுமே செய்ய வேண்டாம். மற்றவர்கள் எல்லாரும் அவரவர்களுக்கான வேலைகளைச் செய்கிறார்களா என்று கவனி." என்று சொல்லிவிட்டு

போய்விட்டார். வேறு வழியில்லாமல் தொழிற்சாலை அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு தந்தை சொன்னபடியே கவனிக்க ஆரம்பித்தபோதுதான் அவன் அந்தத் தவிப்பை உணர முடிந்தது.

தொழிற்சாலைக்குள் இருள் விலகுவதற்குள் தொழிலாளிகள் அனைவரும் பதைபதைப்போடு ஓடி வந்து விடுகிறார்கள். ஓய்வு என்பது மருந்துக்கும் அவர்களுக்குக் கிடையாது. ஒரு கையில் ஏதேனும் ஒரு கருவியைப் பிடித்துக்கொண்டு எங்கே மணி அடித்துவிடப் போகிறதோ என்ற அச்சத்தோடு இன்னொரு கையால் அவசர அவசரமாக வாயில் எதையோ அள்ளிப் போட்டுக்கொண்டு ஓடுகிறார்கள். இரவு நெருங்கும்போது தன் வயதுள்ள இளைஞர்கள் கூட முதியவர்களைப் போல சுருங்கிப் போய்விடுவதையும் அவர்கள் கண்களில் பல மாத உறக்கம் தேங்கியிருந்ததையும் உடம்பில் பல ஆண்டு களைப்பு உறைந்திருந்ததையும் பார்க்க முடிந்தது அவனால். தன் தந்தையின் வயதொத்த ஒருவர் அவன் அமர்ந்திருந்த அலுவலக அறைக்குள் நுழைந்து மின்விசிறி தொடங்கி புகைபோக்கி வரை எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டுப் போனார். அவர் முதுகு வளைந்திருந்ததால் அவருடைய முகத்தைக்கூட இவனால் சரியாக பார்க்க முடியவில்லை. அறையை சுத்தம் செய்து கொண்டு வந்த அவர் கொஞ்சம் நகருங்கள் ஐயா என்று நகரச் சொல்லிவிட்டு மேசையின் மூலையில் படிந்திருந்த தூசியைத் துடைத்து சுத்தம் செய்துவிட்டு தள்ளாடிய படி நடந்து சென்றார். அவருடைய கால்களில் பிய்ந்துபோன காலணிகள் இருந்தது அவை நழுவிவிடாமல் இருக்க ஒரு கயிறு போட்டு கால்களோடு அவற்றைப் பிணைத்திருந்தார். தினசரி அவர் அந்த அறையை சுத்தம் செய்தார். அந்தப் பெரியவர் தன்னுடைய வேலையில் பொறுப்புடன் நடந்து கொண்டிருந்தார். மற்ற தொழிலாளர்களும் அப்படியே ஓய்வு உறக்கம் இல்லாமல் தொழிற்சாலையில் வேலை பார்த்தனர். இவற்றையெல்லாம் பார்த்ததும் அந்த பதின்ம இளைஞனுக்கு பெரும் தவிப்பாகிவிட்டது. நேரே தன் தந்தையிடம் சென்று ''என்னால் இனியும் அங்கே செல்ல முடியாது அப்பா. என்னை விட்டுவிடுங்கள்.'' என்றான். ''உனக்கு என்னதான் வேண்டும்? உன் பிரச்னைதான என்ன மகனே?'' என்று கேட்டார். அவரின் கேள்விக்கு அந்தப் பதின்ம இளைஞன் எப்படி பதில் சொல்வது என்று திணறினான். மகன் மனம் மாறட்டும் என்று அவனை ரஷ்யாவிலிருந்து மான்செஸ்டருக்கு பெட்டிப் படுக்கையோடு மூட்டை கட்டினார் தந்தை.



நட்சத்திரம் போல் மான்செஸ்டர் மின்னிக் கொண்டிருந்தது. அகலமான வீதிகள், உயரமான கட்டிடங்கள், பகட்டான ஆடைகள் அணிந்த சீமான்களும் சீமாட்டிகளும் வீதிகளில் ஒய்யாரமாக நடந்து கொண்டிருந்தனர். அவனும் அந்த ஊரில் சுற்றித் திரிந்தான். ரஷ்யாவில் உள்ளதைவிட பல மடங்கு பருத்தி ஆலைகள் மான்செஸ்டரிலும் 24 மணி நேரமும் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருந்தன. அவன் நினைத்துக் கொண்டான். இந்த ஊர் நல்ல ஊர். ரஷ்யாவில் கண்டதைப் போன்ற வேதனையூட்டும் காட்சிகளை அங்கே தான் காணவேண்டியிருக்காது என்று கருதினான். ஆனால் அவன் நினைப்பு பொய்த்துப் போனது. அவன் தங்கயிருந்த அடுக்குமாடிக் குடியிருப்பை ஒட்டியுள்ள பாதை ஓரங்களில் குடும்பம் குடும்பமாக மக்கள் ஒண்டிக்கிடப்பதைப் பார்த்து அதிர்ந்து போனான். வானுயர்ந்த கட்டிடங்களுக்கு அருகில் அடுக்கடுக்கான குப்பை மேடுகளும், அங்கே எந்நேரமும் நிரம்பி வழியும் குப்பை மலையில் குழந்தைகள் ஏறி கிளறிக்கொண்டிருப்பதைப் பார்த்ததும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் யார்? அவர்கள் ஏன் படிக்கவில்லை? அவர்களுக்கு வீடு இல்லையா? என்று விசாரித்தபோது அவர்கள் அனாதைக் குழந்தைகள். அவர்களுக்கு யாருமிலலை என்று பதில் வந்தது.

அந்தக் குழந்தைகள் நாளை என்ன ஆவார்கள் என்று அவன் மனத்திரையில் ஓட ஆரம்பித்தது. அவர்கள் இங்குள்ள ஏதேனும் ஒரு ஆலையில் கூலிகளாக சேர்வார்கள். இருள் அவர்களைக் கவ்விக் கொள்ளும். அதன்பிறகு அவர்களால் இறுதிவரை வெளிச்சத்தைப் பார்க்க முடியாது. வாழ்க்கை முழுக்க வியர்வை சிந்தி உழைத்தாலும் கடைசிவரை ஒரு நல்ல ஆடையோ காலணியோகூட அவர்களால் வாங்க முடியாமல் போகும். அவர்கள் முதுகுகள் சில

ஆண்டுகளில் வில்போல் வளைந்து கூன் விழுந்துவிடும். அவர்கள் மீது வானம் பொத்துக்கொண்டு மழை கொட்ட வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. அட்லீஸ்ட் இந்த அளவுக்கு உடலையும் மனதையும் வருத்திக்கொண்டு உழைத்தும் இவர்கள் வாழ்வில் ஏன் ஒரு சிறு தூறல்கூட விழவில்லை? என்ற கேள்வி அவனுள் பூதாகரமாக எழுந்து நின்றது. அதற்கான காரணத்தைத் தேடி அலைந்தபோது சிலர் மார்க்ஸ் என்பவரிடம் கேட்டால் உங்கள் சந்தேகத்திற்கு விடை கிடைக்கும் என்றனர். அந்த இளைஞனும் மார்க்ஸை தேடிக் கண்டுபிடித்து தன்னுடைய சந்தேகங்களையெல்லாம் கொட்டினான்.

"பிரச்னை ரஷ்யாவிலோ, மான்செஸ்டரிலோ இல்லை. நம்மிடம்தான்" என்றார் கார்ல் மார்க்ஸ். "அனைவருக்கும் சமமாகச் சென்று சேரவேண்டிய மழையை ஒரு சிலர் தங்களுடைய வீட்டுக்குள் அடக்கி வைத்துக் கொண்டால் எப்படி உலகம் செழிக்கும் ஏங்கல்ஸ்?" என்றார் கார்ல் மார்க்ஸ்

கார்ல் மார்க்ஸ் உடனான அந்த சந்திப்பிற்குப் பின் பிடரிக் ஏங்கெல்ஸ் தன் தந்தைக்கு கடிதம் எழுதினார். "அப்பா உங்களிடமிருந்தும் நீங்கள் எனக்குக் கொடுத்த பொறுப்புகளிடமிருந்தும், நமக்காக நீங்கள் சேமித்து வைத்த செல்வத்திடமிருந்தும் இன்றோடு நான் விலகிக் கொள்கிறேன். உங்கள் கனவுகளை நான் தொடர முடியாது. எனக்கென்று ஒரு புதிய கனவு உதித்திருக்கிறது. இந்த உலகை அனைவருக்குமானதாக நான் மாற்றி அமைக்க விரும்புகிறேன். நானும் மார்க்ஸும் இணையும்போது, எங்கள் இருவரோடு தொழிலாளர்களும் கரம் சேர்த்துக்கொள்ளும்போது, எங்கள் கனவு எப்படி நிறைவேறாமல் போகும்?"

டியர் காம்ரேட்ஸ், பிரச்னை ஆளும் கட்சியிடமோ, எதிர்கட்சியிடமோ இல்லை மக்களாகிய நம்மிடம்தான் உள்ளது. இந்த உலகை அனைவருக்குமானதாக உண்மையில் நம்மால் மாற்றி அமைக்க முடியும். மார்க்ஸும் ஏங்கெல்ஸும் இணைந்தது போல நாம் இணைவோமா? மார்க்ஸும் ஏங்கெல்ஸும் செய்ததை நாம் தொடர்வோமா?

- ஜிஜி


## அரசு ஊழியர் இதழ் பற்றிய அறிக்கை
## நமுனா (18ஆம்) பாடப் பிரிவு

| | |
|---|---|
| வெளியிடும் இடம் | : சென்னை-5 |
| வெளியிடும் காலம் | : மாத இதழ் |
| அச்சிடுபவர் | : மு.அன்பரசு |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ் எண். 19/1 & 21/2 கிட்டாபாத் கான் பகதூர் தெரு, எல்லீஸ் ரோடு, சென்னை - 600 002 |
| வெளியிடுபவர் | : மு.அன்பரசு |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஆசிரியர் | : ஆ.செல்வம் |
| நாட்டினம் | : இந்தியர் |
| முகவரி | : 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |
| ஒரு சதவீதத்துக்கு மேல் பங்குத்தொகை அளித்துள்ளவர்கள் | தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், 46, தேரடித் தெரு திருவல்லிக்கேணி சென்னை - 600 005 |

மு.அன்பரசு என்னும் நான் மேலே கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் என் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் அறிந்தவரை உண்மையென்று இதன்மூலம் உறுதியளிக்கிறேன்.

சென்னை
1.4.2021

மு.அன்பரசு
வெளியிடுபவர்



Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A.SELVAM. Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com